# குறள் முத்துக்கள்

முனைவர் மு. இராசாராம் இஆப



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

13142

# குறள் முத்துக்கள்

முனைவர் மூ. இராசாராம் இஆப

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**
*இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்*
*தரமணி, சென்னை - 600 113*

STATE DEPARTMENT OF
LIBRARY,
Acc. No 13142
Date

# நூல்விவரக் குறிப்பு


நூல் தலைப்பு : குறள் முத்துக்கள்

ஆசிரியர் : முனைவர் மூ. இராசாராம் இஆப
அரசுச் செயலாளர்
தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை
தமிழ்நாடு அரசு

வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை 600 113
தொலைபேசி எண் 044/22542992

ISBN No. : 978-93-85165-41-2

வெளியீட்டு எண் : 929

மொழி : தமிழ்

பதிப்பு : முதற்பதிப்பு

பதிப்பு ஆண்டு : 2016

பயன்படுத்திய தாள் : 18.6 கிகி டி.என்.பி.எல் வெள்ளை

நூலின் அளவு : 1/8 டெம்மி

எழுத்தின் அளவு : 10 புள்ளி

பக்க எண்ணிக்கை : vii+119

அச்சுப்படிகளின் எண்ணிக்கை : 1200

விலை : ரூ. 70/- (ரூபாய் எழுபது மட்டும்)

அச்சகம் : ஸ்ரீ சரவணா அச்சகம்
சென்னை - 600 001

பொருள் : நீதி இலக்கியம்

**முனைவர் கோ.விசயராகவன்** எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.,எம்.பி.ஏ.,பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

## அணிந்துரை

தமிழில் உருவான திருக்குறள் அனைத்து மொழி நூல்களுக்கும் தலைசிறந்த ஒரு நூலாக உள்ளது. உலக இலக்கிய மேதைகள் மாமனிதர்கள் கூறியுள்ள கருத்துகள், தத்துவங்கள் அனைத்தும் திருக்குறளில் மிகுதியாகச் செறிவுடன் காணப்படுகின்றன. திருக்குறளின் கருத்துகளும் திருவள்ளுவரின் பொதுமைத் தன்மையும் ஆழ்ந்த புலமையும் தொலைநோக்குப் பார்வையும் இன்றும் வியக்கத்தக்க வகையில் உள்ளன. யாரையும் தனித்து அடையாளப் படுத்தும் வகையில் திருக்குறள் உருவாக்கப்படவில்லை என்பதில் திருக்குறள்தனிப் பெரும் நூலாக விளங்குகிறது. சாதாரண மக்கள்முதல் அரசர்கள்வரை எல்லோருக்குமான வாழ்க்கை வழி நூலாகப் போற்றப்படும் வகையில் திருக்குறளைத் திருவள்ளுவர் உருவாக்கியவிதம் போற்றத்தக்கதாக உள்ளது. அந்தவகையில் நூலாசிரியர் இந்நூலை உருவாக்கி இருப்பது திருக்குறளே வினாவாகவும் அதற்குத் திருவள்ளுவரே பதிலாகவும் அமையும் விதத்தில் உருவாக்கப்பட்டது சிறப்பு.

இந்நூல் ஆசிரியர் எத்தனை எது, எதை, எப்படி, என்ன, எவை, யார் என்று பதினைந்துக்கும் (15) மேற்பட்ட வினா அமைப்பு முறைகளில் 988 வினாக்களை உருவாக்கி அதற்கு விடைகளையும் வழங்கியுள்ளார்.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள், ஆய்வாளர்கள் வரை அனைவருக்கும் பொருந்தும் வகையில் சமூகத்திற்கு இக்காலக்கட்டத்தில் மிகவும் பயனுடைய சிறந்த நூலாகக் **குறள் வினா-விடை** என்னும் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு வினாக்களும் குறளுக்கான அமைப்பு முறைகளிலும் சமூகத் தேவைக்கான வழிமுறைகளிலும் தோன்றியுள்ளனவாகவே கருதமுடிகிறது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் தமிழ்மீதும் தமிழர்மீதும் தமிழ்ப் பண்பாட்டின்மீதும் கொண்டுள்ள அன்பும் கருணையும் அளப்பரியன. தமிழின்

மேம்பாட்டிற்கெனக் கோடிக்கணக்கான மதிப்பீட்டில் பல திட்டங்களை மேற்கொண்டு செயலாற்றி வருகின்றார்கள். இவ்வாறு ஒல்லும்வகையெல்லாம் தமிழ் வளர்த்துவரும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைப் பதிவு செய்கின்றோம்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தன் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சரும் இந்நிறுவனத் தலைவருமான திரு. கே. சி. வீரமணி** அவர்களுக்கு எமது இதயங்கனிந்த நன்றி.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழக அரசின் **தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு. த. உதயசந்திரன், இ.ஆ.ப.** அவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றி.

இந்நூல் தொடர்பான பணிகளைச் செய்துவரும் திருக்குறள் காட்சிக்கூடப் பொறுப்பாளர் முனைவர் து. ஜானகி அவர்களுக்கும் **தமிழ்த்தாய் 68 - பெருவிழா** தொடர்பான அனைத்துப் பணிகளையும் செய்து வரும் நிறுவனக் கல்வியாளர்கள் மற்றும் பிற பணியாளர்கள் மற்றும் இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீ சரவணா அச்சகத்தாருக்கும் எம் பாராட்டுகள்.

**இயக்குநர்**

# முன்னுரை

சமயவழி நின்று மன்னுயிர்க்கு அறத்தைக் கூறிய திருவள்ளுவர் தோன்றிய தமிழ்கூறு நல்லுலகம் **நற்றவ வானினும் நனி சிறந்ததுவே** என நம்மைப் பெருமை கொள்ள வைக்கின்றது. அவரது திருக்குறள் உலகப் பொதுநூல். அனைத்துக் காலத்துக்கும் அனைத்து நாட்டுக்கும் அனைத்து மக்களுக்கும் பொருத்தமான கருத்துப் பெட்டகம் போன்ற சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வாழ்வில் பின்பற்ற வேண்டிய அறநெறிகளை வள்ளுவர் தனக்கே உரித்தான தனித்தன்மையுடன் வடித்துள்ளார். இதன்வழி வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துக் கருத்துகளையும் நாம் பெறமுடிகின்றது.

குறள் முத்துக்கள் எனும் இந்நூல் பல கேள்விகளை எண்ணங்களாக எழுப்பி என்னைச் சிந்திக்க வைத்த பெருமைக்குரியது. இந்நூல் திருக்குறள் குறித்த நல்லதொரு தெளிவை வழங்குவதாக அமைகின்றது. இந்நூலை ஒருவர் மீண்டும் மீண்டும் படித்து இக்கருத்துகளைத் தன்வயமாக்கிக் கொண்டால் அவர் தன்னை உணரும் ஆற்றலைப் பெறமுடியும்; தன்னம்பிக்கையைப் பெற முடியும்; மனப்பக்குவத்தைப் பெற முடியும் என்று கூறுமளவிற்கு ஆழமான, நுட்பமான, கருத்துச் செறிவுள்ள வாழ்க்கைத் தத்துவங்களை உள்ளங்கனி நெல்லிக்கனிபோல் எடுத்துரைக்க இந்நூல் வழி முயன்றுள்ளேன்.

நல்ல பல நூல்களை வெளியிட்டுத் தமிழுலகுக்குச் சிறப்புச் சேர்த்து வரும் இந்நிறுவனம் சிந்தனைச் செறிவு கொண்ட **குறள் முத்துக்கள்** எனும் இந்நூலை வெளியிடுவதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

வள்ளுவரின் பட்டறிவைப் பட்டை தீட்டிய வைரமாக அனைவரும் எளிதாகப் படித்துணர்ந்து தம் அறிவை மேம்படுத்தி அதன்வழி தன்வாழ்வை அமைக்க இந்நூல் உதவின் அதுவே எனது சிந்தனைக்குக் கிடைத்த நற்பேறாகும்.

**மூ. இராசாராம்**

# குறள் முத்துக்கள்

# குறள் முத்துக்கள்

## எத்தனை?

1. திருக்குறளில் எத்தனை பால்கள் உள்ளன?

   மூன்று (அறம், பொருள், இன்பம்)

2. திருக்குறளில் எத்தனை குறள்கள் உள்ளன?

   1330.

3. திருக்குறளில் எத்தனை அதிகாரங்கள் உள்ளன?

   133.

4. திருக்குறளில் ஓர் அதிகாரத்தில் எத்தனை குறள்கள் உள்ளன?

   பத்து.

5. கடவுளுக்குரிய பண்புகள் எத்தனை?

   எட்டு (குறள் 9).

## எது?

6. வளரும் தலைமுறைக்கு வழிகாட்டக் கூடிய சிறந்த நூல் எது?

   திருக்குறள்.

7. மொழிக்கு முதல் எழுத்து எது?

   அ (குறள் 1).

8. படிப்படியான வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைவது எது?

   அறம் (குறள் 32).

9. உள்ளத்தில் எது இல்லாமல் இருப்பது சிறந்த அறம்?
குற்றம் (குறள் 34).

10. வாழ்க்கையில் செய்யவேண்டியது எது?
அறம் (குறள் 40).

11. குடும்ப வாழ்க்கையின் உயர்ந்த பண்பு எது?
அன்பு (குறள் 45).

12. குடும்ப வாழ்க்கையின் உயர்ந்த பயன் எது?
அறம் (குறள் 45).

13. பெற்றோர்க்குக் குழல் இசையைவிட இனிமையானது எது?
குழந்தைப்பேச்சு (குறள் 66).

14. பிறரிடம் உறவை வளர்ப்பது எது?
அன்பு (குறள் 74).

15. முகர்ந்து பார்த்த அளவில் வாடுவது எது?
அனிச்ச மலர் (குறள் 90).

16. ஒருவர் செய்த உதவியை மறந்தவர்க்கு எது கிடைக்காது?
மன்னிப்பு (குறள் 110).

17. ஒருவரைத் தெய்வமாக உயர்த்துவது எது?
அடக்கம் (குறள் 121).

18. எல்லார்க்கும் நல்லது எது?
பணிதல் (குறள் 125).

19. ஏழு தலைமுறைக்கும் பாதுகாப்பாக அமைவது எது?
அடக்கம் (குறள் 126).

20. ஒருவருக்கு உயர்வு தருவது எது?
ஒழுக்கம் (குறள் 131).

21. உயிரைவிடச் சிறந்தது எது?
ஒழுக்கம் (குறள் 131).

22. பொறாமை உடையவரிடம் எது இருக்காது?
வளர்ச்சி (குறள் 135).

23. எது மேன்மை தரும்?
ஒழுக்கம் (குறள் 137).

24. நல்வாழ்வுக்கு அடிப்படையாக அமைவது எது?
ஒழுக்கம் (குறள் 138).

25. பொறுமைக்கு எது உவமை?
பூமி (குறள் 151).

26. வலிமையிலும் வலிமை மிக்கது எது?
பொறுமை (குறள் 153).

27. மனக் கட்டுப்பாட்டிற்கு எது தேவை?
பொறுமை (குறள் 154).

28. எது பாவச் செயல்?
பொறாமை (குறள் 168).

29. தீயைவிட பயப்படத் தக்கது எது?
தீமை (குறள் 202).

30. அழியக் கூடிய உலகில் அழியாதது எது?
புகழ் (குறள் 233).

31. செல்வங்களுள் எல்லாம் சிறந்த செல்வம் எது?
அருள் (குறள் 241).

32. இவ்வுலக வாழ்க்கைக்கு அடிப்படையானது எது?
பொருள் (குறள் 247).

33. உண்ணக் கூடாதது எது?
புலால் (மாமிசம்) (குறள் 257).

34. கொடியது எது?
போர்க்கருவி (குறள் 279).

35. நினைக்கக் கூடாதது எது?
திருட்டு (குறள் 282).

36. பேசக் கூடாதது எது?
பொய் (குறள் 293).

37. பேச வேண்டியது எது?
உண்மை (குறள் 296).

38. உள்ளத்தின் தூய்மையை அறிய உதவுவது எது?
உண்மை (குறள் 298).

39. ஒருவருடைய சிரிப்பையும் மகிழ்ச்சியையும் கெடுப்பது எது?
கோபம் (குறள் 304).

40. வராமல் காக்க வேண்டியது எது?
கோபம் (குறள் 305).

41. சிறந்த அறச்செயல் எது?
கொல்லாமை (குறள் 321).

42. துன்பத்திற்கு அடிப்படை எது?
ஆசை (குறள் 361).

43. கண் போன்றது எது?
கல்வி (குறள் 392).

44. படிக்கப் படிக்க வளர்வது எது?
அறிவு (குறள் 396).

45. ஒருவர் எதுவரை படிக்கவேண்டும்?
சாகும்வரை (குறள் 397).

46. ஏழு தலைமுறைக்கும் அல்லது பிறப்புக்கும் பெருமை தருவது எது?
படிப்பு (குறள் 398).

47. அழிவு வராமல் காப்பது எது?
அறிவு (குறள் 421).

48. நல்வழியில் செல்ல வழிகாட்டுவது எது?
அறிவு (குறள் 422).

49. கடிய வேண்டியது எது?
குற்றம் (குறள் 434).

50. கொள்ளக் கூடாதது எது?
தற்பெருமை (குறள் 439).

51. வருவாயை விட எது அதிகமாகிவிடக் கூடாது?
செலவு (குறள் 478).

52. ஒருவருடைய புகழைக் கெடுப்பது எது?
மறதி (குறள் 532).

53. எது இல்லாத கண்களால் பயன் இல்லை?
இரக்கம் (குறள் 573).

54. ஒருவருடைய நிலையான சொத்து எது?
ஊக்கம் (குறள் 592).

55. வேண்டாதது எது?
சோம்பல் (குறள் 605).

56. பிறருக்கு அடிமையாகக் காரணமாக அமைவது எது?
சோம்பல் (குறள் 608).

57. ஒருவருக்குப் பெருமை தருவது எது?
முயற்சி (குறள் 611).

58. செல்வத்தை உண்டாக்குவது எது?
முயற்சி (குறள் 616).

59. வாழ்க்கைக்கு அணையா விளக்கு எது?
பொருள் (குறள் 753).

60. மனிதப் பண்பில்லாத செயல் எது?
பகை (குறள் 871).

61. ஒருவருக்கு நிலையான பழியை உண்டாக்குவது எது?
சூது (குறள் 932).

62. பெருமைக்குரியவரிடம் இல்லாதது எது?
ஆணவம் (குறள் 979).

63. மாந்தர் சிறப்பு எது?
நாணுடைமை (குறள் 1012).

64. உலகில் தலைமையான தொழில் எது?
உழவு (குறள் 1031).

65. வறுமையைவிடக் கொடியது எது?
வறுமையே (குறள் 1041).

## எதை?

66. பேசும் பேச்சு எதைத் தர வேண்டும்?
பயனை (குறள் 200).

67. எதைச் செய்யக் கூடாது?
தீமையை (குறள் 204).

68. எதைப் படிக்க வேண்டும்?
நல்லதை (குறள் 391).

69. ஒருவருடைய உயர்வு எதைப் பொறுத்தது?
உள்ளத்தை (குறள் 595).

70. எதைத் துணிவோடு எதிர்கொள்ள வேண்டும்?
துன்பத்தை (குறள் 630).

71. எதைப் பார்த்து ஒரு மனிதனைப் பழிக்கக்கூடாது?
உருவத்தை (குறள் 667).

72. எதைக் குடிக்கக் கூடாது?

கள்ளை (குறள் 922).

## எப்படி?

73. வாழவேண்டிய நெறிப்படி வாழபவர் எப்படி மதிக்கப்படுவார்?

தெய்வமாக (குறள் 50).

74. எப்படிப் பேச வேண்டும்?

இனிமையாக (குறள் 100).

75. எப்படிப் பேசக் கூடாது?

கடுமையாக (குறள் 100).

76. ஓர் அரங்கில் தோன்றினால் எப்படித் தோன்ற வேண்டும்?

புகழோடு (குறள் 234).

77. செல்வம் எப்படிப்பட்டது?

நிலையில்லாதது.

78. மக்கள் பிறப்பால் எப்படிப்பட்டவர்கள்?

ஒருவரே (குறள் 972).

79. பெருமைக்கு உரியவர்கள் எப்படி இருப்பர்?

பணிவோடு (குறள் 978).

## என்ன?

80. பிஞ்சுக் குழந்தைகளின் பேச்சுக்கு என்ன பெயர்?

மழலைச் சொல் (குறள் 66).

81. தீமை செய்தவர் என்ன ஆவார்?
கெடுவார் (குறள் 208).

82. ஏழைகளுக்குச் செய்யும் உதவிக்கு என்ன பெயர்?
ஈகை (குறள் 221).

83. நல்ல குடிப்பிறப்பு என்னும் சிறப்புப் பெற என்ன வேண்டும்?
பணிவு (குறள் 960).

84. தீமை செய்தவர்க்கும் என்ன செய்ய வேண்டும்?
நன்மை (குறள் 987).

85. திருக்குறள் எழுதிய உலகப் பேரறிஞர் யார்?
திருவள்ளுவர்.

86. வீட்டிற்கும் பெருமை தருபவர் யார்?
தாய் (குறள் 60).

87. தாய் தந்தையர்க்கு மிகப் பெரிய செல்வம் யார்?
குழந்தைகள் (குறள் 63).

88. பெற்றவருக்குப் பெருமை சேர்ப்பவர் யார்?
பிள்ளைகள் (குறள் 70).

89. எல்லாப் பொருள்களையும் தமக்கே சொந்தம் என நினைப்பவர் யார்?
அன்பில்லாதவர் (குறள் 72).

90. தம் உடல் எலும்பைக்கூடப் பிறருக்குச் சொந்தமாக்க நினைப்பவர் யார்?

அன்புடையவர் (குறள் 72).

91. யார் தீமை செய்ய பயப்படுவார்?

நல்லவர் (குறள் 201).

92. யார் தீமை செய்ய பயப்படமாட்டார்?

தீயவர் (குறள் 201).

93. கண்ணுடையவர் யார்?

படித்தவர் (குறள் 393).

94. மக்களுள் தாழ்ந்தவர் யார்?

படிக்காதவர் (குறள் 395).

95. பின்னர் நடக்கக்கூடியதை முன்னரே அறியக்கூடியர் யார்?

அறிவுடையவர் (குறள் 427).

96. உறவாகக் கொள்ளத் தக்கவர் யார்?

பெரியவர் (குறள் 443).

97. யாரோடு நட்புக் கொள்ளக் கூடாது?

தீயவரோடு (குறள் 815).

98. பகைவரைக்கூட நண்பராகக் கருதுபவர் யார்?

பண்பாளர் (குறள் 874).

99. உயர்ந்த குணங்களைக் கொண்டோர் யார்?

சான்றோர் (குறள் 982).

100. எத்தகைய சொற்களைப் பேச வேண்டும்?

பயனுடைய சொற்களை (குறள் 200).

101. எத்தகைய சொற்களைப் பேசக் கூடாது?

பயனில்லாத சொற்களை (குறள் 200).

102. எத்தகைய குடும்பத்தில் பிறந்தவர் ஒழுக்கம் தவறமாட்டார்?

நல்ல குடும்பத்தில்.

103. குழந்தைகள் எத்தகையவர்களாக இருத்தல் வேண்டும்?

அறிவுடையவர்களாக (குறள் 61).

104. எத்தகையவர் கண்கள் புண்களாகக் கருதப்படும்?

படிக்காதவர் (குறள் 393).

105. எத்தகையவர் நட்பை விட்டு விலகுவது உயர்வு தரும்?

அறிவில்லாதவர் (குறள் 797).

106. எத்தகையவர் பிறர் குற்றத்தை மறைப்பார்?

பெருமைக்குரியவர் (குறள் 980).

107. நல்லவர்களின் வாயிலிருந்தும் வரும் சொற்கள் எத்தகையவை?

இனிமையானவை (குறள் 91).

108. ஒழுக்கம் உடையவர் வாய்ச்சொற்கள் எத்தகையவை?

ஊன்றுகோல் போன்றவை (குறள் 415).

109. உலக உயிர்கள் பிறப்பால் எத்தகையவை?

ஒன்றே (குறள் 972).

## எது?

110. மனிதன் தெய்வமாக வாழ வழிகாட்டும் நூல் எது?

திருக்குறள்.

111. கடவுள் ஒருவரே என்பதைச் சுட்டும் பெயர் எது?

ஆதிபகவன் (குறள் 1).

112. பெரியர் என்னும் பெருமை தரும் செயல் எது?

செயற்கரிய செய்வது (குறள் 26).

113. சிறப்பு, செல்வம் என்னும் இரண்டையும் தருவது எது?

அறம் (குறள் 31).

114. முழுமையான அறம் எது?

மனத்தூய்மை (குறள் 34).

115. பெறத்தக்கப் பேறுகளுள் சிறந்த பேறு எது?

குழந்தைப்பேறு (குறள் 61).

116. மனித இன உறவுக்கு அடிப்படையாக அமைவது எது?

அன்பு (குறள் 74).

117. விருந்தினர்க்கு உவமையாகும் மலர் எது?

அனிச்சமலர் (குறள் 90).

118. சான்றோர்க்கு அணி எது?

நடுவுநிலைமை (குறள் 118).

119. கொடிய துன்பத்துள் செலுத்துவது எது?

அடங்காமை (குறள் 121).

120. ஐம்புல அடக்கத்திற்கு எடுத்துக்காட்டாக அமைவது எது?

ஆமை (குறள் 126).

121. மனித உயிர்க்கு மிகப்பெரும் சிறப்பினைத் தருவது எது?

ஒழுக்கம் (குறள் 131).

122. எது உயர்ந்த குடிப்பிறப்பு?

ஒழுக்கப்படி வாழ்வது (குறள் 133).

123. பொறாமை கொண்டவர்க்குப் பகையாக அமைவது எது?

அந்தப் பொறமையே (குறள் 162).

124. பாவி எனப் பழிக்கத்தக்கது எது?

பொறாமை (குறள் 168).

125. எது இருப்பவர் பெருமை பெற முடியாது?

பொறாமை (குறள் 170).

126. எது ஆணவச் செயல்?

தீமை செய்வது (குறள் 201).

127. எது ஈகை?

ஏழைக்கு உதவுவது (குறள் 221).

128. உயிரின உறவுக்கு அடிப்படையாக அமைவது எது?

அருள் (குறள் 242).

129. அருள் இல்லாத செயல் எது?
உயிர்க்கொலை (குறள் 254).

130. எது ஒருவனை நீண்ட நாள் வாழவைக்கும்?
புலால் உண்ணாதிருப்பது (குறள் 255).

131. வஞ்சனை உணர்வு எது?
திருட நினைப்பது (குறள் 287).

132. எது வாய்மையால் காணப்படும்?
அகம் தூய்மை (குறள் 298).

133. சான்றோர்க்குச் சிறந்த விளக்கு எது?
பொய்யாமை (குறள் 299).

134. ஒருவருக்கு அழிவில்லாத உயர்ந்த செல்வம் எது?
கல்வி (குறள் 400).

135. செல்வத்துள் செல்வம் எது?
கேள்விச் செல்வம் (குறள் 411).

136. மனம் போன போக்கில் போகவிடாமல் தடுப்பது எது?
அறிவு (குறள் 422).

137. அழிவு தரும் பகை எது?
குற்றம் (குறள் 434).

138. வளர்ச்சியைத் தருவது எது?
நல்ல மனம் (குறள் 457).

139. எல்லா வகையான புகழையும் தருவது எது?
நல்ல இனம் (குறள் 457).

140. ஒருவரின் பெருமைக்குகும் சிறுமைக்கும் அடிப்படையாக அமைவது எது?

செயல் திறமை (கருமம்) (குறள் 505).

141. ஒரு நாட்டிற்கு வெற்றியைத் தருவது எது?

நல்ல ஆட்சி (குறள் 546).

142. நாட்டை ஆள்பவரைக் காப்பது எது?

செங்கோல் (குறள் 547).

143. கண்ணிற்கு அணிகலனாக அமைவது எது?

இரக்கம் (குறள் 575).

144. எது நில்லாது நீங்கிவிடும்?

பொருள் (குறள் 592).

145. எது வறுமையைப் புகுத்திவிடும்?

முயற்சி இல்லாமை (குறள் 616).

146. உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் தருவது எது?

முயற்சி (குறள் 619).

147. கேட்பவரைக் கவரக்கூடியதாக அமைய வேண்டியது எது?

பேச்சு (குறள் 643).

148. விரும்புவன எல்லாம் தருவது எது?

நல்ல செயல் (குறள் 651).

149. எது கடினமான செயல்?

சொல்லியபடி செய்வது (குறள் 664).

150. மதிப்பில்லாதவரையும் மதிப்பிற்குரியவராகச் செய்வது எது?

பொருள் (குறள் 751).

151. அன்பு பெற்ற குழந்தை எது?

அருள் (குறள் 757).

152. ஒரு செயல் செய்யும்போது பெரும் பாதுகாப்பாக அமைவது எது?

நட்பு (குறள் 781).

153. பழகப் பழக இன்பம் தருவது எது?

பண்புடையவர் நட்பு (குறள் 783).

154. நட்பிற்கு அடிப்படையாக அமைவது எது?

ஒத்த உணர்ச்சி (குறள் 785).

155. இன்மையுள் இன்மை எது?

அறிவு இன்மை (குறள் 841).

156. சமுதாயத்தில் கொடிய நோய் போன்றது எது?

வேற்றுமை உணர்வு (குறள் 853).

157. விளையாட்டாகக்கூட விரும்பக் கூடாதது எது?

பகை (குறள் 871).

158. பகைவரையும் நண்பராகக் கருதுவதால் எது நிலைக்கும்?

உலக உறவு (குறள் 874).

159. அஞ்சவேண்டியது எது?

உட்பகை (குறள் 883).

160. மன்னிக்க முடியாத பெரிய குற்றம் எது?
கள் குடிப்பது (குறள் 924).

161. சமுதாய மதிப்புகளை எல்லாம் அழித்து ஒழிப்பது எது?
சூது (குறள் 934).

162. இழக்க இழக்க ஆசையைப் பெருக்குவது எது?
சூது (குறள் 940).

163. ஒருவர் நல்ல குடியில் பிறந்தவர் என்பதைக் காட்டுவது எது?
வாய்ச்சொல் (குறள் 959).

164. பகைவரையும் நண்பராக மாற்றும் கருவி எது?
பணிவு (குறள் 985).

165. அறிவு, பண்பு – இவற்றுள் எது பெரியது?
பண்பு (குறள் 977).

166. உயர்ந்தவர்களுக்குப் பாதுகாப்பான வேலி எது?
நாணம் (குறள் 1016).

167. நல்ல கொள்கையை விட்டு விட்டால் எது கெடும்?
குடும்பம் (குறள் 1019).

168. எதன் அளவினை அறிந்து பிறருக்கு உதவ வேண்டும்?
வருவாய் (குறள் 477).

169. இரக்கம் இல்லாதவர் எதற்குச் சமம்?
மரத்திற்கு (குறள் 576).

170. உடல் எதனால் ஆகியது?

ஐம்பூதங்களால் (குறள் 271).

171. மக்கள் எதனால் ஒத்திருக்க வேண்டும்?

பண்பால் (குறள் 993).

172. பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று எதைத் தள்ளிப் போடக் கூடாது?

அறச்செயலை (குறள் 36).

173. படைக்கருவி வைத்திருப்பவர் நெஞ்சம் எதை நினைக்காது?

நல்லதை (குறள் 253).

174. கோபம் எதைக் கெடுக்கும்?

சிரிப்பையும் மகிழ்ச்சியையும் (குறள் 304).

175. ஊக்கம் இல்லாதவர் எதைப் போன்றவர்

மரம் போன்றவர் (குறள் 600).

176. குடும்பப் பெருமையை உயர்த்த நினைப்பவர் எதைப் போக்கவேண்டும்?

சோம்பலை (குறள் 60).

177. எதை முன்பிறப்பின் பாவமாகக் கருதக் கூடாது?

ஊனமாகப் பிறப்பதை (குறள் 618).

178. கூர்மையான அறிவு பெற்றிருந்தும், மக்கட் பண்பு இல்லாதவர் எதைப் போன்றவர்?

மரத்தைப் போன்றவர் (குறள் 997).

179. சான்றாண்மை எதை இருப்பிடமாகக் கொண்டது?

நாணத்தை (குறள் 1013).

## எந்த?

180. உணவை எந்த அளவுக்கு உண்ண வேண்டும்?

அளவோடு (குறள் 945).

181. நினைப்பனவற்றை எந்த அளவிற்கு நினைக்க வேண்டும்?

பெரிதாக (குறள் 596).

182. பயன் தராத சொற்களை மதிப்பவரை எப்படி அழைக்க வேண்டும்?

மக்கள் பதடி (குறள் 196).

183. இலஞ்சம் வாங்குவது எப்படிப்பட்ட செயல்?

இழிந்த செயல் (குறள் 660).

## எப்படி?

184. ஒருவருடைய நெஞ்சமே அவரை எப்போது வருத்தும்?

பொய் சொன்னால் (குறள் 283).

185. குடும்பம் நடத்துவதில் ஏற்படும் குறைபாடுகளை எப்போது ஒழித்து விடலாம்?

சோம்பலை ஒழித்தால் (குறள் 609).

186. உறவினர் எப்போது தீயவராகக் கருதப்படுவார்?

துன்பம் தந்தால் (குறள் 881).

## எவை?

187. குடும்ப வாழ்க்கையின் பண்பும் பயனும் எவை?

அன்பும் அறனும் (குறள் 45).

188. மக்களுக்கு இரு கண்களாக அமைபவை எவை?
எண்ணும் எழுத்தும் (குறள் 392).

189. சான்றோர்க்கு எவை இயல்பான கடமைகள்?
நல்லவை எல்லாம் (குறள் 981).

190. நல்ல வழியில் வந்த பொருள் எவற்றைத் தரும்?
அறமும் இன்பமும் (குறள் 754).

## என்ன?

191. இனிமையான சொற்கள் என்ன பயன் தரும்?
இன்பம் தரும் (குறள் 99).

192. நடுவு நிலையிலிருந்து தவறினால் என்ன ஏற்படும்?
கேடு வரும் (குறள் 116).

193. ஒழுக்கம் இல்லாதவருக்கு என்ன கிடைக்காது?
உயர்வு (குறள் 135).

194. பிறர் பொருளைத் தவறாக அடைய நினைத்தால் என்னாகும்?
அழிவு வரும் (குறள் 180).

195. ஒருவர் கண்ணெதிரே இல்லாதபோது என்ன செய்யக்கூடாது?
பழிக்கக்கூடாது.

196. சிறந்த பண்புகள் உடையவர், பயனற்ற பேச்சுகளைப் பேசினால் என்ன நடக்கும்?
மதிப்புக் கெடும் (குறள் 195).

197. நமக்குத் தீமை செய்பவர்களுக்குக்கூட நாம் என்ன செய்தல் கூடாது?

தீமை (குறள் 203).

198. மனிதப் பிறப்பின் பயன் என்ன?

புகழ் பெற்று வாழ்வது (குறள் 231).

199. பிறர் பொருளை அவர் அறியாமல் திருடி விடலாம் என நினைப்பது என்னவாகும்?

தீமை தரும் (குறள் 282).

200. செய்ய வேண்டாத செயல்களைச் செய்தால் என்ன ஆகும்?

கேடும் வரும் (குறள் 466).

201. செய்ய வேண்டிய செயல்களைச் செய்யாவிட்டால் என்ன வரும்?

கேடு வரும் (குறள் 466).

202. ஒருவரிடம் தொடர்ந்து வரும் வறுமை என்ன செய்யும்?

அறிவைக் கெடுக்கும் (குறள் 532).

203. ஒருவரிடம் உள்ள மறதி என்ன செய்யும்?

புகழைக் கெடுக்கும் (குறள் 532).

204. துன்பம் வரும்போது என்ன செய்ய வேண்டும்?

சிரிக்க வேண்டும் (குறள் 621).

205. நல்ல துணை என்ன தரும்?

முன்னேற்றம் (குறள் 651).

206. தகுதி இல்லாதவர் நட்பை என்ன செய்ய வேண்டும்?

விலக்கிவிட வேண்டும் (குறள் 850).

207. பகை என்பது என்ன?

பண்பில்லாத செயல் (குறள் 871).

208. செல்வம் பெருகிய காலத்தில் என்ன செய்ய வேண்டும்?

பணிவு (குறள் 963).

209. மானத்தோடு வாழ்பவர் என்னவென்று அழைக்கப்படுவார்?

கவரிமா (குறள் 969).

210. சான்றோர்கள் தம் பண்பிலிருந்து தவறினால் இந்த உலகம் என்ன ஆகும்?

தாங்காது (குறள் 990).

211. விளையாட்டாகக்கூட ஒருவரை என்ன செய்தல் கூடாது?

பழிக்கக் கூடாது (குறள் 995).

212. அன்பும் அறனும் இல்லாது சேர்த்த பணம் என்ன ஆகும்?

கொள்ளை போகும் (குறள் 1009).

213. தவறான செயல் செய்ய வெட்கப்படுவதற்கு என்ன பெயர்?

நாணம் (குறள் 1011).

## யார்?

214. பெற்றவர், மனைவி, மக்கள் ஆகியோருக்குப் பாதுகாவலாக அமைய வேண்டியவர் யார்?

குடும்பத் தலைவர் (குறள் 41).

215. ஆண்களின் எல்லா வளத்திற்கும் காரணமாக அமைபவர் யார்?

மனைவி (குறள் 51).

216. கணவனுக்குச் சிறந்த செல்வமாக அமைபவர் யார்?

சிறப்புடைய மனைவி (குறள் 53).

217. முகம் திரிந்து பார்த்த அளவில் வாடிவிடுபவர் யார்?

விருந்தினர் (குறள் 90).

218. யார் உறவை மறக்கக் கூடாது?

குற்றம் இல்லாதவர் (குறள் 106).

219. தீய சொற்களை வாய் தவறியும் யார் சொல்லமாட்டார்?

ஒழுக்கம் உடையவர் (குறள் 139).

220. மக்களால் பொன்போல் போற்றி மதிக்கப்படுபவர் யார்?

பொறுமை உடையவர் (குறள் 153).

221. யார் கெடுவது உறுதி?

தீமை செய்தவர் (குறள் 208).

222. கடியத் தக்கவர் யார்?

போலித்துறவி (குறள் 276).

223. பயன்தராத களர்நிலம் போன்றவர் யார்?

படிக்காதவர் (குறள் 406).

224. தேவர்களுக்கு ஒப்பான பெருமை உடையவர் யார்?

கேள்வி அறிவுடையவர் (குறள் 413).

225. ''எல்லாம் உடையார்'' எனப் பாராட்டத் தக்கவர் யார்?

அறிவுடையவர் (குறள் 414).

226. யார் புகழ் அடைய மாட்டார்?

மறதி உடையவர் (குறள் 533).

227. யார் நாட்டை ஆண்டால் நாடு கெடும்?

கொடியவர் (குறள் 564).

228. கண் இருந்தும் இல்லாதவர் யார்?

கண்ணோட்டம் இல்லாதவர் (குறள் 577).

229. அழிவு வந்தபோதும் தளராதவர் யார்?

ஊக்கம் உடையவர் (குறள் 597).

230. தாயே பழித்திருந்தாலும் யார் பழிக்கும் செயலைச் செய்யக் கூடாது?

சான்றோர் (குறள் 656).

231. ஒரு நல்ல நாட்டிற்கு அடிப்படைய அமைபவர் யார்?

நல்ல தலைவர் (குறள் 740).

232. யார் நட்பு வளர்பிறை போல நாளும் வளரும்?

நல்லவர் நட்பு (குறள் 782).

233. யார் வயிறாற உண்ணமாட்டார்

சூதாடுபவர் (குறள் 936).

234. தலையிலிருந்து உதிர்ந்து விழும் தலைமுடிக்குச் சமமானவர் யார்?

மானம் கெட்டவர் (குறள் 964).

235. செய்வதற்கு முடியாத செயல்களைத் திட்டமிட்டுச் செய்து முடிப்பவர் யார்?

பெருமை உடையவர் (குறள் 975).

236. என்றும் பணிவோடு இருப்பவர் யார்?

பெருமைக்கு உரியவர் (குறள் 978).

237. உயர்ந்த பண்புகளால் முழுமை பெற்று விளங்குபவர் யார்?

சான்றோர் (குறள் 982).

238. பகைவரிடத்தும் பண்பான சொற்களையே பேசுபவர் யார்?

பண்பாளர் (குறள் 995).

239. பிறரை வணங்காமல் வாழும் தகுதி உடையவர் யார்?

உழவர் (குறள் 1033).

240. யாருக்குத் துன்பம் இல்லை?

ஆசை இல்லாதவருக்கு (குறள் 368).

241. அளவு கடந்து கோபம் கொள்பவர் யாருக்குச் சமம்?

செத்தவருக்கு (குறள் 307).

242. யாருக்கு இவ்வுலக இன்பம் இல்லை?

பொருள் இல்லாதவர்க்கு (குறள் 247).

243. யாரிடம் உயர்வு இருக்காது?

ஒழுக்கம் இல்லாதவரிடம் (குறள் 135).

244. யாரிடம் அருள் உணர்வு இருக்காது?

புலால் உண்பவரிடம் (குறள் 251).

245. யாரிடம் வளர்ச்சி இருக்காது?

பொறாமை உடையவரிடம் (குறள் 135).

246. யாரிடம் கொண்ட நட்பு வளர்வதைவிடக் குறைவது மேல்?

தீயவரிடம் (குறள் 811).

247. இந்த உலகம் யாரால் இன்னும் அழியாமல் இருக்கிறது?

பண்பாளர்களால் (குறள் 996).

## எத்தனை?

248. கடவுள் எத்தனை உண்டு?

ஒன்று (குறள் 1).

249. நாம் கட்டுப்படுத்த வேண்டிய புலன்கள் எத்தனை?

ஐந்து (குறள் 126).

250. ஒருவர் செய்யும் நன்மையும் தீமையும் எத்தனை தலைமுறைகள் (அல்லது பிறவிகள்) தொடரும்?

ஏழு (குறள் 126).

251. மனித வாழ்க்கைக்கு வேண்டிய உறுதிப் பொருள்கள் எத்தனை?

மூன்று (குறள் 760).

252. சூதாடிகள் ''ஒன்று'' பெற்று, எத்தனை இழப்பர்?

நூறு (குறள் 932).

## எத்தகையது?

253. புலால் (மாமிசம்) உண்பவர்களுக்கு எத்தகைய உணர்வு தோன்றாது?

அருள் உணர்வு (குறள் 252).

254. எத்தகைய கண்களால் பயன் இல்லை?

கண்ணோட்டம் இல்லாத கண்களால் (குறள் 573).

255. எத்தகைய பிறப்பு பழிக்குரியதாகக் கருதப்படாது?

ஊனமாகப் பிறக்கும் பிறப்பு (குறள் 618).

256. எத்தகைய உணவை உண்ணக்கூடாது?

ஒவ்வாத உணவை (குறள் 944).

257. நல்ல குடியில் பிறந்தவர் எத்தகைய செயலை செய்யமாட்டார்?

தீய செயலை (குறள் 954).

258. வறுமை அடைந்த காலத்தில் எத்தகைய நிலை வேண்டும்?

தலை நிமிர்வு (குறள் 963).

259. திருவள்ளுவர் கூறும் கடவுள் வழிபாடு எத்தகையது?

கடவுளை மனத்தால் நினைப்பது.

260. பேசும் பேச்சு எத்தகையதாக இருத்தல் வேண்டும்?

குற்றம் இல்லாததாக (குறள் 642).

261. அந்தணர் என்பவர் எத்தகையவர்?

அறவோர் (குறள் 30).

262. எத்தகையவர் வாயிலிருந்து வரும் சொற்கள் இனிமையும் இரக்கமும் உடையவை?

நல்லவர்கள் (குறள் 91).

263. எத்தகையவர் சுற்றம் உணவும் உடையும் இல்லாமல் கெடும்?

பொறாமை உடையவர் (குறள் 166).

264. எத்தகையவர் நட்பைத் தழுவிக்கொள்ள வேண்டும்?

குற்றம் இல்லாதவர் (குறள் 800).

265. கயவர்கள் எத்தகையவர்கள்?

தம் விருப்பப்படியெல்லாம் நடப்பவர்கள் (குறள் 1073).

## எதனை?

266. உலக உயிர்களிடம் அன்பு செய்து வாழ்வது எதன் பயன்?

பிறப்பின் பயன் (குறள் 73).

267. சமுதாய மதிப்பைத் தரும் பொருளாக எதனைக் காக்க வேண்டும்?

அடக்கம் (குறள் 122).

268. ஒழுக்கம் உடையவர்கள் எதனை வாய் தவறியும் சொல்ல மாட்டார்கள்?

தீய சொற்களை (குறள் 139).

269. திருட நினைக்காத பெருமித உணர்வு எதனைத் தரும்?

உயர்வு (குறள் 180).

270. ஒருவரை எதனைக் கொண்டு மதிப்பிட வேண்டும்?
அவரால் கிடைக்கும் பயன் (குறள் 279).

271. ஒரு நாட்டு மக்கள் எதனை நம்பி வாழ்கிறார்கள்?
நல்ல ஆட்சியை (குறள் 542).

272. எதனை உடையவர் ''உடையர்'' எனப்படுவார்?
ஊக்கம் (குறள் 591).

273. கள் குடியர்கள் எதனை இழப்பர்?
சமுதாய மதிப்பை (குறள் 921).

274. குழந்தைகளின் பிஞ்சுக் கைகளால் துழாவப்பட்ட சோறு. எதனைவிட இனிமையானது?
அமிழ்தினும் இனியது (குறள் 64).

275. தக்க நேரத்தில் ஒருவர் செய்யும் உதவி எதைவிடப் பெரியது?
உலகத்தைவிட (குறள் 102).

276. பயன்கருதாமல் ஒருவர் செய்த உதவி எதைவிடப் பெரியது?
கடலைவிட (குறள் 103).

277. தம் நிலையில் தாழ்ந்து போகாமல் அடக்கத்துடன் வாழ்பவர் தோற்றம் எதைவிட் உயர்ந்தது?
மலையைவிட (குறள் 124).

278. எதற்குக் கைம்மாறு (பிரதிபலன்) எதிர்பார்க்கக் கூடாது?
சமுதாயக் கடமைகள் செய்வதற்கு (குறள் 211).

279. படிக்காதவர் எதற்குச் சமம்

விலங்குக்கு (குறள் 410)

280. எதற்குத் தக்கவாறு அறிவு திரியும்?

சேர்ந்த இனத்திற்குத் தக்கவாறு (குறள் 452).

281. ஒருவருக்கு எதற்குத் தக்கபடி உயர்வு கிடைக்கும்?

ஊக்கத்திற்குத் தக்கபடி (குறள் 595).

282. தம் நிலையிலிருந்து தாழ்ந்துவிடும் மனிதர்கள் எதற்குச் சமம்?

தலையிலிருந்து உதிர்ந்த முடிக்கு (குறள் 964).

283. ''உயர்ந்த குடியில் பிறந்தவர்'' என்னும் சிறப்பு எதனால் வரும்?

ஒழுக்கத்தால் (குறள் 133).

## எது?

284. சாதி, மதம், இனம், கட்சி, காலம் ஆகியன கடந்த''உலகப் பொதுமறை'' எது?

திருக்குறள்.

285. சாகும்போது நீங்காத துணையாக இருப்பது எது?

அறச்செயல் (குறள் 36).

286. இல்லறம், துறவறம் – இவற்றுள் அறம் என்னும் சிறப்புநிலை உடையது எது?

இல்லறம் (குறள் 49).

287. உடலின் உள் உறுப்பாக அமையும் பண்பு எது?

அன்பு (குறள் 79).

288. அன்பின் வழியது எது?

உயிர் நிலை (குறள் 80).

289. செல்வ நிலையிலும் வறுமை என்பது எது?

விருந்தினரைப் போற்றாமை (குறள் 89).

290. பொறமை கொண்டவர்க்கு எதிரி எது?

பொறாமையே (குறள் 165).

291. பலரும் வெறுக்கும்படியாகச் செய்வது எது?

பயன் இல்லாத பேச்சு (குறள் 191).

292. நல்ல குடியில் பிறந்தவர் பண்பு எது?

ஏழைகளுக்கு உதவுவது (குறள் 223).

293. பசியைத் தாங்கிக்கொள்ளும் வலிமையைவிடப் பெரியது எது?

இன்னொருவர் பசியைப் போக்குவது (குறள் 225).

294. இன்னோர் உயிரின் ''புண்'' என இகழத்தக்கது எது?

புலால் (குறள் 257).

295. அளவு கடந்து வளர்வது போலத் தோன்றி, அடியோடு அழிவது எது?

திருடுவதால் வந்த வளர்ச்சி (குறள் 283).

296. திருடி வாழ்பவர் நெஞ்சில் எது நீங்காமல் இருக்கும்?

வஞ்சனை (குறள் 288).

297. அளவறிந்து வாழ்பவர் நெஞ்சில் எது நீங்காமல் இருக்கும்?

அறம் (குறள் 288).

298. முற்பகல் செய்தால், பிற்பகல் தானே வந்து சேர்வது எது?

துன்பம் (குறள் 319).

299. நல்ல செயல்களுள் முதன்மையானது எது?

கொல்லாமை (குறள் 323).

300. நாடக அரங்கிற்கு மக்கள் வருவதும் போவதும் போன்றது எது?

பெருஞ்செல்வம் வருவதும் போவதும் (குறள் 332).

301. எது பெற்றால், நிலைபெறுவதற்கான செயல்களை உடனே செய்திட வேண்டும்?

நிலையில்லாத செய்வம் (குறள் 333).

302. பிறவித் துன்பங்களுக்கு அடிப்படையாக அமைவது எது?

ஆசை (குறள் 361).

303. எது உயர்ந்த செல்வம்?

ஆசை இல்லாமை (குறள் 363).

304. நாட்டை ஆள்பவர் எது தவறாதவராக இருந்தால் மக்கள் தெய்வமாக மதிப்பார்கள்?

நீதிநெறி (குறள் 388).

305. ''கண்ணுடையார்'' என்னும் பெருமையைத் தருவது எது?

கல்வி (குறள் 393).

306. நல்லவரிடம் சேர்ந்த வறுமையவிடத் தீங்கானது எது?

படிக்காதவரிடம் சேர்ந்த செல்வம் (குறள் 408).

307. வழுக்கல் நிலத்தில் கைத்தடி போல உதவுவது எது?

ஒழுக்கம் உடையவர் வாய்ச்சொல் (குறள் 415).

308. ஒருவரைப் பணிவாகப் பேச வைப்பது எது?

நுட்பமான கேள்வி அறிவு (குறள் 419).

309. அறிவுடையார் செயல் எது?

அஞ்சத்தக்கனவற்றிற்கு அஞ்சுவது (குறள் 428).

310. சான்றோர்க்கு நல்ல பாதுகாப்பாக அமைவது எது?

நல்லவர் சேர்க்கை (குறள் 458).

311. அந்தணர் நூல், அறம் ஆகிய இரண்டிற்கும் அடிப்படையாக அமைவது எது?

ஆட்சித் தலைவரின் செங்கோல் (குறள் 543).

312. ஆட்சியாளரை எது காக்கும்?

அவருடைய வளையாத செங்கோல் (குறள் 547).

313. இவர் இன்னார் என்னும் மதிப்பைத் தருவது எது?

அவர் சேர்ந்த இனம் (குறள் 453).

314. ஆட்சியை அடியோடு அழிக்கும் கருவி எது?

ஏழையின் கண்ணீர் (குறள் 555).

315. இந்த உலகம் அழியாமல் இருப்பதற்கு எது காரணம்?
கண்ணோட்டம் (இரக்கம்) (குறள் 571).

316. கண்ணிற்கு வேண்டிய இரக்கம் இல்லாதவர் எது போன்றவர்?
மண்ணில் இருக்கும் மரம் (குறள் 57).

317. ஒருவரின் நிலையான செல்வம் எது?
ஊக்கம் (குறள் 592).

318. பலர் கடிந்தும் இகழ்ந்தும் பேசும் பேச்சுக்கு ஒருவரை ஆளாக்குவது எது?
சோம்பல் (குறள் 607).

319. துன்பத்தை வெற்றிகொள்ளும் வழி எது?
துன்பம் வரும்போது சிரித்தல் (குறள் 621).

320. உயரவேண்டும் என்ற நினைப்பவர் செய்யக்கூடாதது எது?
மதிப்பைக் கெடுக்கும் செயல் (குறள் 653).

321. பழியோடு வந்த செல்வத்தைவிட எது மேல்?
நல்லவர் அடையும் வறுமை (குறள் 657).

322. செயலின் உறுதி என்பது எது?
மனத்தின் உறுதியே (குறள் 661).

323. எது வளர்வதைவிடக் குறைவதே நன்மை தரும்?
தீயவரிடம் கொண்ட நட்பு (குறள் 811).

324. துன்பத்துள் துன்பம் தருவது எது?
வேற்றுமை உணர்வு (குறள் 854).

325. பெற்ற தாயின் முகத்தில் கூட வெறுப்பை உண்டாக்குவது எது?

கள் குடிப்பது (குறள் 923).

326. சூதாடிகளுக்குத் திருவள்ளுவர் வழங்கும் விருது எது?

''ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்'' (குறள் 932).

327. பொருளும் வருவாயும் ஒருவரை விட்டு விலகக் காரணமாக அமைவது எது?

சூது (குறள் 933).

328. பகைவர் பின் சென்று மானங்கெட்டு வாழ்வதைவிட எது நல்லது?

தன்மானத்துடன் சாவது (குறள் 967).

329. மேலோர், கீழோர் என்பதை வரையறுக்கும் அளவுகோல் எது?

பண்பு (குறள் 973).

330. ஆணவத்தின் எல்லைக்கே போகச் செய்வது எது?

சிறுமைப் பண்பு (குறள் 979).

331. திறமையாளரிடம் அமைய வேண்டிய மிகப்பெரிய திறமை எது?

பணிவு (குறள் 985).

332. கூர்மையான அறிவு, மக்கட் பண்பு இவற்றுள் எது உயர்ந்தது?

மக்கட்பண்பு (குறள் 997).

**333.** நாணம் என்னும் நல்ல பண்பை இருப்பிடமாகக் கொண்டது எது?

சான்றாண்மை (குறள் 1013).

## எந்த?

334. ஒருவருக்கு அறிவு எந்த அளவிற்குச் சுரக்கும்?

கல்வி கற்ற அளவிற்கு (குறள் 396).

## எப்படி?

335. பிறர் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்பவரை நாம் எப்படி மதிக்க வேண்டும்?

பொன்போல் (குறள் 155).

336. துன்பம் வந்த காலத்தும் எப்படிப்பட்ட செயல்களைச் செய்யக்கூடாது?

இழிவான செயல்கள் (குறள் 654).

## எப்போது?

337. எப்போது தீமை அழிந்து நன்மை பெருகும்?

நல்லனவற்றை இனிமையாகச் சொன்னால் (குறள் 96).

**338.** ஒருவர் எப்போது பல சிறப்புகளை அடைவார்?

ஒழுக்கப்படி நடந்தால் (குறள் 137).

**339.** துன்பம் இல்லாத வாழ்வு நாம் விரும்பியவாறு எப்போது வந்து சேரும்?

ஆசையை முழுமையாக விடும்போது (குறள் 367).

340. வரவு சிறியதானாலும் எப்போது தீங்கவில்லை?

செலவு பெரியதாகாமல் இருந்தால் (குறள் 478).

341. எப்போது ஒரு குடும்பம் பகைவருக்கு அடிமையாகிவிடும்?

குடும்பத்தில் சோம்பல் புகும்போது (குறள் 608).

342. செல்வம் எப்போது அறத்தைப் பெருக்கி இன்பத்தைக் கொடுக்கும்?

நல்ல வழியில் வாழ்ந்தால் (குறள் 754).

343. குற்றம் இல்லாத நிலையான தெளிவு எப்போது பிறக்கும்?

வேற்றுமை உணர்வு நீங்கினால் (குறள் 853).

344. எப்போது தப்பிப் பிழைக்க முடியாது?

பெரியவருக்குத் தீங்கு செய்தால் (குறள் 896).

345. ஆடவர்க்கு எப்போது பெருமை உண்டாகும்?

மனக் கட்டுப்பாட்டோடு வாழ்ந்தால் (குறள் 974).

## எவ்வாறு?

346. ஒரு செயலை எவ்வாறு முடிக்க வேண்டும்?

குறைவு இன்றி முடிக்க வேண்டும் (குறள் 612).

## எவை?

347. ஒருவர் ‘‘நிறைமொழி மாந்தர்’’ என்பதை எவை காட்டும்?

அவருடைய வாழ்க்கை நெறிகள் (குறள் 28).

348. உயர்வான வாழ்க்கைக்குப் படிக்கற்களாக அமைபவை எவை?

இடைவிடாமல் செய்யும் நல்ல செயல்கள்.

349. குழந்தைகளிடம் இருக்கவேண்டியவை எவை?

அறிவு, பண்பு (குறள் 61, 62).

350. ஒருவருடைய தலைமுறையினருக்கும் பாதுகாப்பாக அமைபவை எவை?

நடுநிலையாளர் பெற்ற வளர்ச்சிகள் (குறள் 112).

351. எண்ணும் எழுத்தும் மக்களுக்கு எவை போன்றன?

கண்கள் (குறள் 392).

352. ஆட்சியாளர்களுக்கு இரு கண்கள் எவை?

ஒற்றரும் சிறந்த அற நூலும் (குறள் 581).

353. ஒருவர் இன்ன குடும்பத்தில் பிறந்தவர் என்பதை எவை காட்டிவிடும்?

வாயிலிருந்து வரும் சொற்கள் (குறள் 958).

354. மக்கள் என்னும் சிறப்பைத் தருவன எவை?

நிறைவான பண்புகள் (குறள் 993).

355. எவை எல்லார்க்கும் பொது?

உணவு, உடை போன்றன (குறள் 1012).

356. தகுதி வரையறுக்கும்போது எவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்?

சமுதாய ஏற்றத் தாழ்வுகளை (குறள் 111).

357. துறவு சிறக்க எவற்றை அடக்க வேண்டும்?

ஐம்புலன்களை (குறள் 343).

## என்ன?

358. குணக்குன்றாக விளங்குபவர் என்ன செய்யமாட்டார்?

கோபம் கொள்ளமாட்டார் (குறள் 29).

359. தமக்கு ஒருவர் செய்த தீங்கைப் பொறுத்துக் கொண்டால் என்ன பயன் கிடைக்கும்?

உலகம் உள்ளவரை புகழ் நிலைத்திருக்கும் (குறள் 156).

360. ஒருவர் இல்லாதபோது அவரைப் பழித்துப் பேசி பொய்யான வாழ்வு வாழ்வதைவிட என்ன செய்யலாம்?

செத்துப்போகலாம் (குறள் 183).

361. தான் நன்றாக வாழ வேண்டும் என்று விரும்புபவர் என்ன செய்ய வேண்டும்?

தீமையின் பக்கமே போகக் கூடாது (குறள் 209).

362. ''ஒப்புரவு'' என்றால் என்ன?

பிறருக்காகவே வாழும் நெறி (குறள் 213).

363. ''ஈகை'' என்றால் என்ன?

ஏழைக்கு வேண்டுவன கொடுப்பது (குறள் 221).

364. பிறர் தன்னைப் பழிக்கக் கூடாது என எண்ணுபவர் என்ன செய்யக் கூடாது?

திருட நினைக்கக்கூடாது (குறள் 281).

365. கோபம் கொள்வதால் என்ன பயன் உண்டாகும்?

தீமை தரும் (குறள் 303).

366. தம்மைத் தாமே காத்துக்கொள்ள விரும்பும் ஒருவர் என்ன செய்ய வேண்டும்?

கோபம் வராமல் காக்க வேண்டும் (குறள் 306).

367. தான் துன்பப்படக்கூடாது எனக் கருதுபவர் என்ன செய்ய மாட்டார்?

பிறருக்குத் துன்பம் செய்ய மாட்டார் (குறள் 320).

368. படித்தபின் என்ன செய்ய வேண்டும்?

படித்தபடி நடக்க வேண்டும் (குறள் 391).

369. இந்த உலகத்தையே தன் பக்கம் கொண்டு வர நினைப்பவர் என்ன செய்ய வேண்டும்?

தக்க காலம் பார்த்திருப்பார் (குறள் 485).

370. சுற்றத்தாரிடம் என்ன செய்ய வேண்டும்?

மனம் விட்டுப் பேசிப் பழக வேண்டும் (குறள் 523).

371. துன்பங்கள் வருவதற்கு முன்னரே அவை வராமல் காக்க மறந்தவர் பின்னர் என்ன செய்வார்?

தன் தவறுக்கு வருந்துவார் (குறள் 535).

372. நட்புக் கொள்ளும்முன் என்ன செய்ய வேண்டும்?

நன்றாக ஆராய வேண்டும் (குறள் 791).

373. சொல் வேறு செயல் வேறாக இருப்பவர் நட்பு என்ன செய்யும்?

கவலையும் துன்பமும் தரும் (குறள் 819).

374. உள்ளத்தளவில் நண்பராக இல்லாதவரின் பேச்சை என்ன செய்ய வேண்டும்?

நம்புதல் கூடாது (குறள் 825).

375. இகல் உணர்வு இல்லாமல் வாழ்வதால் என்ன பயன் கிடைக்கும்?

வளர்ச்சிகள் கிடைக்கும் (குறள் 858).

376. நண்பர் போல நடிக்கும் பகைவரைக் கண்டால் என்ன செய்ய வேண்டும்?

அஞ்ச வேண்டும் (குறள் 882).

377. ஒருவர் நல்ல குடிப்பிறப்பு என்னும் சிறப்பினைப் பெற என்ன வேண்டும்?

பணிவு வேண்டும் (குறள் 960).

378. ஒருவரின் ஊக்க மிகுதி அவருக்கு என்ன தரும்?

பெருமை தரும் (குறள் 971).

379. 'நயன்' என்றால் என்ன?

மனிதநேயம் (குறள் 994).

380. சிறந்த பண்புகள் உடையவர் பயனற்ற பேச்சுகளைப் பேசினால் என்ன ஆகும்?

வளர்ச்சியும் மதிப்பும் கெடும் (குறள் 195).

381. அவ்வரவர் குணங்களை அறியாமல் செய்யும் நன்மை என்ன ஆகும்?

தவறாகி விடும் (குறள் 469).

382. தன் பொருளின் அளவை அறியாமல் வாரிக் கொடுத்தால் என்ன ஆகும்?

செல்வ நிலை விரைவில் கெடும் (குறள் 480).

383. நாம் பிறரை அழ வைத்து அவர் பொருளைக் கொண்டால் என்ன ஆகும்?

அப்பொருள் நம்மை அழ வைத்து நீங்கும் (குறள் 659).

384. நீண்ட கால நண்பர்கள் எனக் கொண்டு தகாதன செய்தால் என்ன ஆகும்?

நட்புக் கெடும் (குறள் 700)

385. தனக்குத் தகுதி இல்லாதவர் முன் ஒருவர் பேசும் பேச்சு என்ன ஆகும்?

பயனில்லாது போகும் (குறள் 720).

386. பெரியவர்களை மதிக்காமல் நடந்தால் என்ன ஆகும்?

நீங்காத துன்பம் வந்தடையும் (குறள் 892).

387. செயல் திறம் உடைய பெரியவர்களுக்குத் தீங்கு செய்தால் என்ன ஆகும்?

கேடு வரும் (குறள் 893).

388. பண்பாளர்கள் இல்லை என்றால் இந்த உலகம் என்ன ஆகும்?

அழிந்து விடும் (குறள் 996).

389. பிறரோடு ஒத்து வாழாமல், தன்னைப் பெரிதாக நினைத்துக் கொள்பவர் என்ன ஆவார்?

விரைவில் கெடுவார் (குறள் 474).

390. உயர்ந்த குடியில் பிறந்தவர், உயர்ந்த பண்புகள் இல்லாது போனால் என்ன ஆவார்?

தாழ்ந்து போவார் (குறள் 972).

## யார்?

391. மற்றவர்களால் செய்வதற்குக் கடினமான செயலைச் செய்து முடிப்பவர் யார்?

பெரியர் (குறள் 26).

392. சமுதாயப் பொறுப்புணர்வு இல்லாதவர் யார்?

பயனில்லாத பேச்சுகளை விரிவாகப் பேசுபவர் (குறள் 193).

393. ''மக்கள் பதடி'' யார்?

பயனில்லாத சொற்களைப் பாராட்டுபவன் (குறள் 196).

394. பேரறிவாளர் யார்?

உலகத்து மக்களை எல்லாம் விரும்புபவர் (குறள் 215).

395. துன்பம் இல்லாமல் வாழ்பவர் யார்?

அருளாளர் (குறள் 245).

396. இறப்பையும் வென்று நிற்பவர் யார்?

தவ ஆற்றல் பெற்றவர் (குறள் 269).

397. யார் வஞ்சகர்?

துறவிபோல் வேடமிட்டு நடிப்பவர் (குறள் 276).

398. யார் முடிவில் தீராத துன்பம் அடைவார்?

திருடுவதில் ஆர்வம் உடையவர் (குறள் 284).

399. யார் நீண்ட நாள் வாழ முடியாது?

திருடும் எண்ணம் உடையவர் (குறள் 290).

400. உலக மக்களின் உள்ளங்களில் எல்லாம் வாழ்பவர் யார்?

மனமறிய பொய் பேசாதவர் (குறள் 294).

401. தவமும் தானமும் செய்பவரைவிடச் சிறந்தவர் யார்?

மனமார உண்மை பேசுபவர் (குறள் 295).

402. யார் கெடுவது உறுதி?

கோபத்தைப் பண்பாகக் கொண்டவர் (குறள் 307).

403. யார் நினைத்தவை எல்லாம் உடனே கிடைக்கும்?

உள்ளத்தில் கோபம் கொள்ளாதவர் (குறள் 309).

404. துறவிகளுள் தலைமையானவர் யார்?

முற்றும் துறந்தவர் (குறள் 348).

405. நல்ல நெறிகளில் மக்களுக்கு முன்மாதிரியாக அமைய வேண்டுபவர் யார்?

ஆட்சித்தலைவர் (குறள் 384).

406. தாழ்ந்த குலத்தில் பிறந்து படித்தவர், உயர்ந்த குலத்தில் பிறந்து படிக்காதவர் – இவர்களுள் யார் சிறந்தவர்?

தாழ்ந்த குலத்தில் பிறந்து படித்தவர் (குறள் 409).

407. மக்கள் என்னும் மதிப்பிற்குரியவர் யார்?

சிறந்த நூல்களைப் படித்தவர் (குறள் 410).

408. தாம் சிறிய குற்றம் செய்தாலும், அதனைப் பெரிய குற்றமாகக் கருதுபவர் யார்?

பழிக்கு அஞ்சுபவர் (குறள் 433).

409. நெருப்பின் பக்கத்தில் வைக்கப்பட்ட வைக்கோல் போர் போல யார் வாழ்க்கை கெட்டு அழியும்?

வருமுன்னர் காக்காதவர் வாழ்க்கை (குறள் 435).

410. அற்பர்களைத் தம் சுற்றமாகத் தழுவிக் கொள்பவர் யார்?

இழிந்த குணம் உடையவர் (குறள் 451).

411. அற்பர்களைக் கண்டு அஞ்சி ஒடுங்குபவர் யார்?

பெருமைக்கு உரியவர் (குறள் 451).

412. ஒருவருக்குப் பெரிய துணை யார்?

நல்ல இனம் (குறள் 460).

413. வருவாயை நம்பி முதலீடாக இருக்கும் பணத்தைப் பறிகொடுக்காதவர் யார்?

அறிவுடையவர் (குறள் 463).

414. ஒரு செயலால் வரும் பழிக்கு வெட்கப்படாதவர் யார்?

செயலில் தெளிவு இல்லாதவர் (குறள் 506).

415. துன்பத்திற்கே துன்பம் தருபவர் யார்?

துன்பத்தைக் கண்டு துன்பப்படாதவர் (குறள் 623).

416. யார் நினைத்ததை நினைத்தபடி முடிக்க முடியும்?

மன உறுதி உள்ளவர் (குறள் 666).

417. யார் நட்புத் தேய்பிறை போல நாளும் தேயும்?

பேதையர் நட்பு (குறள் 782).

418. பழகப் பழக யார் நட்பு இன்பம் தரும்?

பண்புடையவர் நட்பு (குறள் 783).

419. சாகும்வரையில் சமுதாயத்திற்கு ஒரு நோய் போன்றவர் யார்?

புல்லறிவாளர் (குறள் 848).

420. தீய அறிவினை உடையவர் யார்?

வேற்றுமை உணர்வாளர் (குறள் 857)

421. நடுவு நிலைமையும் பழிக்கு அஞ்சும் நாணமும் இயல்பாகப் பெற்றிருப்பவர் யார்?

நல்ல குடும்பத்தில் பிறந்தவர் (குறள் 951).

422. மானக்கேடு வருமானால் யார் உயிரை விட்டுவிடுவார்?

மானம் உடையவர் (குறள் 969).

423. உயர்ந்த குடியில் பிறந்திருந்தாலும் யார் உயர்ந்தவர் ஆகமாட்டார்?

உயர்ந்த பண்புகள் இல்லாதவர் (குறள் 73).

424. தாழ்ந்த குடியில் பிறந்திருந்தாலும் யார் தாழ்ந்தவர் ஆகமாட்டார்?

உயர்ந்த பண்புகள் உள்ளவர் (குறள் 973).

425. உலகமே அழியும் காலம் வந்தாலும் தம் நிலையிலிருந்து மாறாதவர் யார்?

சான்றாண்மைக்குக் கடலாக இருப்பவர் (குறள் 989).

426. நாணத்தை வேலியாகக் கொண்டு வாழ்பவர் யார்?

உயர்ந்தவர் (குறள் 1016).

427. உலகம் என்னும் தேருக்கு அச்சாணி போன்றவர் யார்?

உழவர் (குறள் 1032).

428. யாரிடம் செல்வம் தானே வழிகேட்டு வந்து சேரும்?

அசையாத ஊக்கம் உடையவரிடம் (குறள் 594).

429. ''பிறருக்கு உதவவேண்டும்'' என்னும் உயர்ந்த எண்ணம் யாரிடம் இருக்கும்?

விடாமுயற்சியுடன் உழைப்பவரிடம் (குறள் 613).

430. தம் துன்பத்தை யாரிடம் சொல்லக் கூடாது?

தம் துன்பத்தை அறியாதவரிடம் (குறள் 877).

431. யாரிடம் நோய் நிலைத்திருக்கும்?

பெருந்தீனியாளரிடம் (குறள் 946).

432. யாருக்கு மன்னிப்பு கிடையாது?

ஒருவர் செய்த உதவியை மறந்தவருக்கு (குறள் 110).

433. நிலைத்த வாழ்க்கை யாருக்கு அமையும்?

பழியில்லாமல் வாழ்பவர்க்கு (குறள் 240).

434. கோபத்தை விட்டுவிட்டவர்கள் யாருக்குச் சமம்?

துறவியர்க்கு (குறள் 310).

435. யாருக்குப் புகழ் முதலியன நல்லனவாக அமையும்?

மனத்தூய்மை உடையவர்களுக்கு (குறள் 456).

436. எல்லாவகைச் செல்வம் இருந்தும் யாருக்குப் பயன் இல்லை?

மறதி உள்ளவர்க்கு (குறள் 534).

437. தவறான வழிகளில் மக்களிடம் பொருள் பறிக்கும் ஆட்சியாளர் யாருக்குச் சமம்?

திருடனுக்கு (குறள் 552).

438. யாருடைய நெஞ்சம் நல்லது நினைக்காது?

படைக்கருவி வைத்திருப்பவர் நெஞ்சம் (குறள் 253).

439. யாருடைய வாழ்க்கை இருப்பது போலத் தோன்றி இல்லாது போகும்?

அளவறிந்து வாழாதார் வாழ்க்கை (குறள் 479).

440. தாய் தந்தையர் ''தம் பொருள்'' என யாரை உரிமை பாராட்டுவர்?

தம் குழந்தைகளை (குறள் 63).

441. யாரை நமக்குத் துணையாகக் கொள்ள வேண்டும்?

அறத்தை அறிந்தவர்களை (குறள் 441).

## உண்டா?

442. கடவுளுக்கு உருவம் உண்டா?

இல்லை.

443. ஓர் உயிரைக் கொல்லாதிருப்பது எத்தனை வேள்விகள் செய்வதைவிட மேலானது?

ஆயிரம் (குறள் 259).

444. பக்கத்தில் இருந்து கொண்டு தீங்கு செய்கின்ற அமைச்சரைவிட, பகைவர்கள் எத்தனை பங்கு மேல்?

எழுபது கோடி (குறள் 639).

445. அறிவில்லாதவரின் நெருக்கமான நட்பைவிட, அறிவுள்ளவரின் பகை எத்தனை பங்கு மேலானது?

கோடி (பங்கு) (குறள் 816).

## எத்தகையது?

446. எத்தகைய குழந்தைகளைப் பெற்றால் ஏழு தலைமுறைக்கும் பழி வராது?

பண்புடைய குழந்தைகளை (குறள் 62).

447. எத்தகைய ஆட்சியாளர் ''மக்கட்கு இறை'' என்று வழங்கப்படுவார்?

முறைசெய்து மக்களைக் காப்பாற்றுபவர் (குறள் 388).

448. எத்தகைய நூல்களைப் படிக்க வேண்டும்?

வாழ்க்கைக்கு வழிகாட்டும் நல்ல நூல்களை (குறள் 391).

449. எத்தகைய செயல்களை விரும்பக் கூடாது?

சமுதாயப் பயன்தராத செயல்களை (குறள் 439).

450. எத்தகைய செயல்களைச் செய்ய வேண்டும்?

பிறர் பழிக்காத செயல்களை (குறள் 470).

451. எத்தகைய செயலை எப்போதும் செய்யக்கூடாது?

புகழும் நன்மையும் தராத செயலை (குறள் 652).

452. எத்தகைய செயல்களை மெல்ல செய்ய வேண்டும்?

மெல்ல செய்ய வேண்டிய செயல்களை (குறள் 672).

453. எத்தகைய செயல்களை விரைந்து செய்ய வேண்டும்?

விரைந்து செய்யவேண்டிய செயல்களை (குறள் 672).

454. பிறரிடம் மன மாறுபாடு கொள்பவர் எத்தகைய அறிவனிர்?

தீய அறிவினர் (குறள் 857).

455. எத்தகைய குடும்பம், துன்பம் தாக்கினால் அடியோடு விழுந்துவிடும்?

அடுத்துத் தாங்கும் நல்லவர் இல்லாத குடும்பம் (குறள் 1030).

**456.** ஆசை எத்தகையது?

என்றும் முழுமையாக நிறைவேறாதது (குறள் 370).

**457.** நல்லவர் நட்பு எத்தகையது?

வளர்பிறை போல நாளும் வளர்வது (குறள் 782).

**458.** தீயவர் நட்பு எத்தகையது?

தேய்பிறை போல நாளும் தேய்வது (குறள் 782).

**459.** வரம்புமீறி ஒருவர் பேசும் தீய சொற்களைப் பொறுத்துக் கொள்பவர் எத்தகையவர்?

துறவிகளைவிடத் தூய்மையானவர் (குறள் 159).

**460.** ஆட்சியாளர் எத்தகையவராக இருந்தால் நாடு உயர்வு பெறும்?

காட்சிக்கு எளியவராகவும் இனிமையாகப் பேசுபவராகவும் இருந்தால் (குறள் 386)

**461.** மகிழுமாறு கூடுவதும், என்றைக்கும் நினைக்குமாறு பிரிவதும் எத்தகையவர் செயல்?

புலவர் செயல் (குறள் 394).

**462.** கூட்டத்தில் எத்தகையவர் பேசுவதால் ஒன்றும் ஆகப் போவதில்லை?

கூட்டத்தினைப் புரிந்துகொள்ளாமல் பேசுபவர் (குறள் 713).

**463.** எத்தகையவர் நட்பைக் கொள்ளக் கூடாது?

துன்பம் வரும்போது கைவிட்டுச் செல்பவர் நட்பை (குறள் 798).

464. எத்தகையவர் பகைவராலும் விரும்பப்படுவார்?

பழைய நண்பரிடம் கொண்ட நட்பினை விட்டுவிடாதவர் (குறள் 810).

465. எத்தகையவரைவிடப் பகைவரால் பத்துக்கோடி மடங்கு நன்மை கிடைக்கும்?

சிரித்து மகிழ்வதற்காக மட்டுமே வரும் நண்பரைவிட (குறள் 817).

466. எத்தகையவர் பேச்சைச் சிறிதுகூட நம்பதல் கூடாது?

உள்ளத்தளவில் நண்பராக இல்லாதவரின் பேச்சை (குறள் 825).

467. தனியாக இருந்து பலரைப் பகைத்துக் கொள்பவர் எத்தகையவர்?

பைத்தியக்காரரைவிட இரக்கத்திற்கு உரியவர் (குறள் 873).

468. எத்தகையவர் தொடர்புக்கு அஞ்ச வேண்டும்?

நண்பர்போல் நடிக்கும் பகைவர் தொடர்புக்கு (குறள் 881).

469. பெரியவரைத் துணையாகக் கொள்ளும் எண்ணம் எத்தகையவர் உள்ளத்தில் தோன்றாது?

தாழ்ந்தவர் உள்ளத்தில் (குறள் 976).

## எதனை?

470. படித்ததைப் பிறர் அறியும்படித் தெளிவாகச் சொல்ல முடியாதவர்கள் எதனைப் போன்றவர்கள்?

பூத்து மணம் வீசாத
பூ போன்றவர்கள் (குறள் 650)

471. கூட்டத்தில் பேசும்போது இடையிடையே எதனை அறியவேண்டும்?

கூட்டத்தின் போக்கை (குறள் 712).

472. எதனை ஒருவன் விளையாட்டாகக்கூட விரும்பக் கூடாது?

பகை என்னும் பண்பில்லாத செயலை (குறள் 871).

473. எதனை அறிந்து உண்பவரிடம் இன்பம் நிலைத்திருக்கும்?

உண்டது செரித்ததை அறிந்து உண்பவரிடம் (குறள் 946).

474. உயிரினங்களின் நிலைப்பேறு எதனால் தொடர்கிறது?

அன்பால் (குறள் 80).

475. பிற உயிர்களின் வாழ்வு நிலைபெறுவது எதனால்?

புலால் உண்ணாமையால் (குறள் 255).

476. உலகம் எதனால் நிலைபெற்று இருக்கிறது?

கண்ணோட்டம் என்னும் சிறந்த பண்பால் (குறள் 571).

477. மனித வாழ்வு தொடர்ந்து நடைபெற்று வருவது எதனால்?

கண்ணோட்டத்தால் (குறள் 572).

478. இந்த உலகம் எதனால் அழியாமல் இருக்கிறது?

பண்பாளர்கள் இருப்பதால் (குறள் 996).

479. குழந்தைகளுக்கான சமுதாய மதிப்பு எதற்குத் தக அமையும்?

செயலுக்குத் தக (குறள் 63).

480. நம் உயிரும் உடலும் சேர்ந்த சேர்க்கை எதற்காக?

உயிர்களிடம் அன்பு செய்து
வாழ்வதற்காக (குறள் 73)

481. நல்ல ஒழுக்கம் எதற்கு அடிப்படையாக அமைகிறது?

இன்பமான நல்வாழ்வுக்கு (குறள் 138)

482. கயவர்கள் பெரிதும் எதற்கு அஞ்சுவர்?

அச்சுறுத்தலுக்கு (குறள் 1075)

483. ''ஒன்றே உலகம்'' என்னும் உயர்ந்த நோக்கத்திற்கு வழிகாட்டும் சிறந்த நூல் எது?

திருக்குறள்

484. ஐம்புலன்களையும் அடக்கும் ஆற்றல் பெறுவது எது?

அறிவு வல்லமை (குறள் 24)

485. ''அறம்'' என உயர்வாகச் சொல்லப்படுவது எது?

இல்லறம் (குறள் 49)

486. பெண்களுக்கு இருக்கவேண்டிய திண்மை எது?

கற்பு (குறள் 54)

487. உலகில் இன்பமாக வாழ்பவர் பெறும் சிறப்புகளுக்கெல்லாம் எது காரணம்?

அன்பு (குறள் 75)

488. வேதத்தை மறவாமை, ஒழுக்கத்தில் தவறாமை— இவற்றுள் எது சிறந்தது?

ஒழுக்கத்தில் தவறாமை (குறள் 134)

489. பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்வது, அவற்றை மறந்து விடுவது – இவற்றுள் எது சிறந்தது?

பிறர் செய்யும் தீமைகளை மறந்து விடுவது (குறள் 152).

490. ''வன்மையுள் வன்மை'' எது?

அறிவிலார் செய்யும் தீங்கைப் பொறுத்துக் கொள்வது (குறள் 153).

491. ''இன்மையுள் இன்மை'' (வறுமையுள் வறுமை) எது?

விருந்தினரைப் போற்றாமை (குறள் 153).

492. பொறுமைப் பண்பால் எது சிதையாது?

மனக்கட்டுப்பாடு (குறள் 154).

493. உலகம் உள்ளவரை புகழ் நிலைத்திருக்கச் செய்வது எது?

ஒருவர் செய்த தீங்கைப் பொறுத்துக் கொள்வது (குறள் 156).

494. எது ஒருநாள் மட்டும் இன்பம் தருவது?

தமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டிப்பது (குறள் 156).

495. பகைவர் கேடு செய்யத் தவறினாலும் எது கேடு செய்யத் தவறாது?

பொறாமை (குறள் 165).

496. சிறந்த பண்பாளரின் வளர்ச்சியையும் மதிப்பையும் கெடுப்பது எது?

அவர் பேசும் பயனில்லாத பேச்சு (குறள் 195).

497. ''மக்கட் பதடி'' எனப் பிறர் தூற்ற வழிவகுப்பது எது?

பயனில்லாத சொற்களைப் பாராட்டுவது (குறள் 196).

498. ஒருவரை விடாமல் தொடர்ந்து வந்து வருத்துவது எது?

தீய செயல்களால் வந்த பகை (குறள் 207).

499. எது கைம்மாறு (பிரதிபலன்) எதிர்பார்த்துச் செய்யப்படுவது அன்று?

சமுதாயக் கடமை (குறள் 211).

500. இந்த உலகிலும் வேறு எந்த உலகிலும் காண முடியாத நல்ல செயல் எது?

ஒப்புரவு (பிறருக்காகவே வாழ்வது)

501. ஊர் மக்கள் குடிக்கும் குளம், நீரால் நிறைந்தது போன்றது எது?

உலகை விரும்பும் பேரறிவாளர் பெற்ற செல்வம் (குறள் 215).

502. ஊர்மக்களுக்குப் பயன்படும் மரம் ஊரின் நடுவே பழுத்தது போன்றது எது?

உலகிற்காகவே வாழும் நல்லுணர்வாளர் பெற்ற செல்வம் (குறள் 216).

503. முழுமையும் மருந்தாகிப் பயன்படும் மூலிகை மரம் போன்றது எது?

உலகத்திற்கு உதவும் பெருந்தன்மை உள்ளவரிடம் சேர்ந்த செல்வம் (குறள் 217).

504. மேல் உலகம் இல்லையென்றாலும் எது நல்லது?

ஏழைக்கு உதவுவது (குறள் 222).

**505.** எது பொருளை சேமித்து வைப்பது போன்றது?

ஏழைகளின் கொடிய பசியைப்
போக்குவது (குறள் 226).

**506.** தீப்பிணி எனத் திருவள்ளுவரால் சுட்டப்படுவது எது?

பசி (குறள் 227).

**507.** சாவைவிடத் துன்பமான நிலை எது?

ஏழைகளுக்கு உதவ முடியாத நிலை (குறள் 230).

**508.** பொருளை மதிக்காதவர்க்கு எது கிடைக்காது?

பொருள் ஆட்சி (குறள் 252).

**509.** புலால் உண்பவர்களுக்கு எது கிடைக்காது?

அருள் ஆட்சி (குறள் 252).

**510.** சமுதாய மதிப்பில்லாத செயல் எது?

புலால் உண்பது (குறள் 254).

**511.** புலியின் தோல் போர்த்திக் கொண்டு பசு பயிரை மேய்வது போன்றது எது?

மனத்தை அடக்கும் ஆற்றல் இல்லாதவரின் பொய்யான தவ வேடம் (குறள் 273).

**512.** வேடன் புதரில் மறைந்து கொண்டு கண்ணி வைத்துப் பறவைகளைப் பிடிப்பது போன்றது எது?

ஒருவர் தவ வேடத்தில் மறைந்துகொண்டு தவறான செயல்களைச் செய்வது (குறள் 274).

**513.** ஒருவரை மதிப்பிடுவதற்குரிய அளவுகோல் எது?

அவரால் சமுதாயத்திற்குக் கிடைக்கும்
பயன் (குறள் 279).

514. அளவறிந்து வாழபவரிடம் எது இருக்காது?

திருடக் கருதும் வஞ்சனை உணர்வு (குறள் 288).

515. எது செய்தால், பிற அறங்கள் செய்ய வேண்டும் என்னும் கட்டாயம் இல்லை?

பொய் பேசாமையைத் தொடர்ந்து
பின்பற்றினால் (குறள் 297).

516. தன்னைக் கொண்டவரைக் கொல்லக் கூடியது எது?

கோபம் (குறள் 305).

517. எது புல்லறவு?

நிலையில்லாதவைகளை நிலையானவை எனக்
கருதுவது (குறள் 331).

518. இவ்வுலகம் பெற்றுள்ள பெருமை எது?

''நேற்றிருந்தவர் இன்றில்லை'' என்பது (குறள் 336).

519. முட்டைக்கும் அதனுள் இருந்து பறக்கும் பறவைக்கும் உள்ள தொடர்பு போன்றது எது?

உடம்புக்கும் உயிருக்கும் உள்ள
தொடர்பு (குறள் 338).

520. இறப்பு எது போன்றது?

தூங்குவது போன்றது (குறள் 339).

521. எது அறிவு?

ஒரு பொருளின் உண்மைத் தன்மையை
அறிவது (குறள் 355).

522. மனத்தூய்மை என்பது எது?

ஆசை இல்லாதிருப்பது (குறள் 364).

523. என்றும் நிறைவேறாத இயைல்புடையது எது?

ஆசை (குறள் 370).

524. எது ஏழு தலைமுறைக்கும் பெருமை தரும்?

ஒரு தலைமுறையில் ஒருவர் படிக்கும் படிப்பு (குறள் 398).

525. கட்டம் போடாமல் பகடை ஆடுவது போன்றது எது?

போதுமான நூல்கள் படிக்காமல் படித்தவர் கூட்டத்தில் பேச விரும்புவது (குறள் 101).

526. படிக்காதவர்கள் எது போன்றவர்கள்?

பயன் தராத களர் நிலம் போன்றவர்கள் (குறள் 406).

527. வண்ணம் தீட்டி அழகு செய்யப்பட்ட மண் பொம்மை போன்றது எது?

சிறந்த ஆராய்ச்சி அறிவு இல்லாதவரின் அழகிய தோற்றம் (குறள் 407).

528. மனத் தளர்ச்சி ஏற்படும்போது தக்க துணையாக அமைவது எது?

படிக்கவில்லையானாலும் நல்லவர் சொல்வதைக் கேட்பது (குறள் 414).

529. வழுக்கல் நிலத்தில் உதவும் கைத்தடி போன்றது எது?

ஒழுக்கம் உடையவர் வாயிலிருந்து வரும் சொற்கள்.

530. எது அறியாமை?

அச்சப்பட வேண்டிய பழி பாவங்களுக்கு அச்சப்படாமல் இருப்பது (குறள் 428).

531. எது நெருப்பின் பக்கத்தில் வைக்கப்பட்ட வைக்கோல் போர் போலக் கெட்டழியும்?

குற்றம் ஏற்படுவதற்கு முன் அதிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளாதவர் வாழ்க்கை.

532. பலரைப் பகைவராக்கிக் கொள்வதைவிடப் பத்து மடங்கு தீமை தருவது எது?

நல்லவர் ஒருவர் உறவை விட்டு விடுவது (குறள் 450).

533. ஒருவரின் மனத்தூய்மைக்கும் செயல் தூய்மைக்கும் எது அடிப்படை?

இனந்தூய்மை (குறள் 455).

534. ஒருவரின் தலைமுறைக்கே தீராத துன்பத்தைத் தருவது எது?

அறிமுகம் இல்லாதவரை ஆராயாமல் நம்புவது (குறள் 509).

535. குளப்பரப்பானது கரையே இல்லாமல் தண்ணீரால் நிறைந்தது போன்றது எது?

சுற்றத்தாரிடம் மனம்விட்டுப் பேசிப் பழகாதவர் வாழ்க்கை (குறள் 523).

536. ஒருவர் செல்வம் பெற்றதால் பெற்ற பயன் எது?

சுற்றத்தார் சுற்றி இருக்க வாழ்வது (குறள் 524).

537. பயிர்களுக்கு இடையே உள்ள களைகளைப் போக்குவது போன்றது எது?

கொலையின் கொடியாரை ஆட்சியாளர் தண்டிப்பது (குறள் 550).

538. கையில் வேல் வைத்துள்ள திருடன், ''வைத்திருப்பதைக் கொடு'' என்று வழிப்போக்கரை மிரட்டுவது போன்றது எது?

ஆட்சித் தலைவர் தவறான வழிகளில் மக்களிடம் பொருள் பறிப்பது (குறள் 552).

539. மழையே இல்லாமல் உயிர்கள் படும் துன்பம் எது போன்றது?

இரக்கமே இல்லாத ஆட்சியாளரிடம் மக்கள் படும் துன்பம் (குறள் 557).

540. பேயிடம் அகப்பட்ட புதையலைப் போன்றது எது?

எளிதில் பார்க்க முடியாத நிலையிலும் கடுகடுத்த முகத்துடனும் இருப்பவர் செல்வம் (குறள் 665).

541. ''உடையர்'' என்னும் பெருமையை ஒருவருக்குத் தருவது எது?

ஊக்கம் (குறள் 591).

542. போர் செய்ய பேடி தன் கையில் வாள் எடுத்தது போன்றது எது?

உழைப்பு இல்லாதவர் செய்யும் உதவி (குறள் 614).

543. பகைவரும் விரும்பும் சிறப்பைத் தருவது எது?

துன்பத்தையே இன்பம் எனக் கொள்வது (குறள் 630).

544. எது சிறந்த பேச்சு வன்மை?

கேட்பவரைக் கவர்வது, கேளாதவரைக் கேட்கத் தூண்டுவது (குறள் 643).

545. எது நம்மை அழ வைத்து நீங்கி விடும்?

பிறரை அழவைத்துக் கொண்ட பொருள் (குறள் 659).

546. பச்சை மண்குடத்தில் நீர் ஊற்றிப் பாதுகாப்பது போன்றது எது?

தீய வழிகளில் செல்வம் சேர்த்து அதைப் பாதுகாப்பது

547. எவ்வளவுதான் துன்பம் வந்தாலும் துணிவோடு செய்து முடிக்க வேண்டியது எது?

முடிவில் இன்பம் தரும் செயல் 669

548. அணைக்காமல் விட்ட சிறு நெருப்புப் போன்றது எது?

அரைகுறையாக விட்ட செயல் 674

549. பழக்கப்பட்ட யானையைக் கொண்டு புதிய யானையைப் பிடிப்பது போன்றது எது?

வினையால் வினையாக்கிக் கொள்வது 678

550. ஆற்று வெள்ளத்தில் நீந்துபவர் கால் தளர்ந்தது போன்றது எது?

பலதுறை அறிவு பெற்றவர் முன் தவறாகப் பேசுவது 716

551. தானே வளர்கின்ற பயிர் நிறைந்த பாத்தியில் நீர் ஊற்றுவது போன்றது எது?

தாமே உணரவல்ல அறிவுடையார் முன் பேசுவது 718

552. சாக்கடையில் கொட்டிய அமிழ்தம் போன்றது எது?

தனக்குத் தகுதி இல்லாதவர்முன் பேசும் பேச்சு 720

553. போர்க்களத்தில் பேடி பிடித்த கூரிய வாள் போன்றது எது?

அறிஞர் கூட்டத்தில் பேச அஞ்சுபவர் பெற்ற படிப்பறிவு 727

554. குன்றின்மேல் ஏறி நின்று கீழே நடக்கும் யானைப் போர் பார்ப்பது போன்றது எது?

தம் பொருளை வைத்துக்கொண்டு ஒரு
வேலையைச் செய்வது (குறள் 758).

555. பகைவரின் ஆணவத்தை அழிக்கும் கருவி எது?

பொருள் (குறள் 759).

556. எது அறத்தையும் பெருக்கும் இன்பத்தையும் கொடுக்கும்?

நெறியறிந்து குற்றம் இல்லாமல் வந்த
செல்வம் (குறள் 764).

557. பேராண்மை எது?

பகைவரை எதிர்க்கும் வீரம் (குறள் 773).

558. நட்புக் கொள்ளும்போது பெரிதும் கேடு தருவது எது?

ஆராயாமல் நட்புக் கொள்வது (குறள் 791).

559. ஒரு நண்பரின் நட்பை அளவிட்டுக் காணும் அளவுகோல் எது?

துன்பக் காலம்.

560. நட்பில் ஒருவர்க்கு எது உயர்வு தரும்?

அறிவில்லாதவர் நட்பை விட்டு விலகுவது (குறள் 797).

561. சாகும்போது நினைத்தாலும் உள்ளத்தைச் சுட்டெரிக்கக் கூடியது எது?

துன்பம் வந்தபோது கைவிட்டுச் சென்றவர் நட்பு (குறள் 799).

562. நட்பிற்கு இலக்கணம் எது?

உரிமை பாராட்டுவது (குறள் 802).

563. பரத்தையர் மனம்போல் அடிக்கடி வேறுபடுவது எது?

நண்பர்போல் நடிப்பவர் நட்பு (குறள் 822).

564. வில்லின் வளைவைப் போல் தீமை தருவது எது?

பகைவரின் பணிவான செயல் (குறள் 827).

565. அறியாமையுள் எல்லாம் பெரிய அறியாமை எது?

ஒழுக்கம் இல்லாத செயலில் விருப்பம் கொள்வது (குறள் 832).

566. கழுவாத காலினைத் தவப்பள்ளியில் வைப்பது போன்றது எது?

அறிஞர்கள் கூட்டத்தில் அறிவிலி செல்வது (குறள் 840).

567. உயிரின வாழ்க்கை நெறிக்கு மாறுபட்டது எது?

பிரிவினை எண்ணம் (குறள் 851).

568. எது வளர்ச்சியைத் தரும்?

வேற்றுமை உணர்வு இல்லாமல் வாழ்வது (குறள் 858).

569. எல்லா வகையான சமுதாயத் துன்பங்களுக்கும் எது காரணம்?

வேற்றுமை உணர்வு (குறள் 860).

570. சாகும் அளவிற்கான துன்பங்கள் பலவற்றை உண்டாக்குவது எது?

உறவுமுறையில் உண்டாகும் உட்பகை (குறள் 885).

571. அரத்தால் தேய்க்கப்பட்ட பொன்போல் வலிமை குறைந்து அழிவது எது?

உட்பகை கொண்ட குடும்பம் (குறள் 887).

572. ஒரு சிறு குடிசையில் பாம்புடன் சேர்ந்து வாழ்வது போன்றது எது?

மனப்பொருத்தம் இல்லாதவரோடு கூடி வாழும் வாழ்க்கை (குறள் 890).

573. நீரின் அடியில் மூழ்கிக் கிடப்பவரைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது போன்றது எது?

கள் குடித்து மயங்கிக் கிடக்கும் நிலையில் உள்ள ஒருவரைத் திருத்த முயல்வது (குறள் 929).

574. தூண்டில் முள்ளை மீன் விழுங்கியது போன்றது எது?

சூதில் கிடைக்கும் வெற்றியை விரும்புவது (குறள் 931).

575. வழிவழியாக வந்த செல்வத்தையும் நல்ல பண்புகளையும் அழிக்கவல்லது எது?

சூதாடும் இடத்திற்கு நாள்தோறும் செல்வது (குறள் 937).

576. உடை, செல்வம், உணவு, மதிப்பு, கல்வி ஆகிய அனைத்தையும் இழக்கச் செய்வது எது?

சூது (குறள் 939).

577. எது நீண்டநாள் வாழும் வழி?

உண்ட உணவு செரித்தபின் அளவோடு உண்பது (குறள் 943).

578. ஒருவருக்குச் சிறுமை தருவது எது?

ஊக்கம் இல்லாமல் வாழலாம் என எண்ணுவது (குறள் 971).

579. ஆடவருக்குச் சமுதாய மதிப்புத் தருவது எது?

கற்புடைய மகளிரைப் போன்ற
மனக்கட்டுப்பாடு (குறள் 974).

580. தாழ்ந்தவர் உள்ளத்தில் எது தோன்றாது?

பெரியவரைப் போற்றித் துணையாகக் கொள்வோம்
என்னும் எண்ணம் (குறள் 976).

581. எது தவறான செயலாகி விடும்?

தகுதியற்ற கீழ்மக்களுக்குச் செய்யப்படும்
சிறப்பு (குறள் 977).

582. சால்பின் பயன் யாது?

தீமை செய்தவர்க்கும் நன்மையே செய்வது (குறள் 988).

583. நல்ல பால் பாத்திரத்தின் குறைபாட்டால் கெடுவது போல் எது கெடும்?

பண்பில்லாதவரிடம் சேர்ந்த மிகப்
பெருஞ்செல்வம் (குறள் 1000).

584. அழகான பெண் தனியே வாழ்ந்து முதுமை அடைவதைப் போன்றது எது?

ஏழைகளுக்கு வேண்டுவதைக் கொடுத்து
உதவாதவருடைய செல்வம் (குறள் 1007).

585. ஊர் நடுவே கொடிய நச்சு மரம் பழுத்ததைப் போன்றது எது?

பிறரால் விரும்பப்படாதவருடைய செல்வம் (குறள் 1008).

586. மேகம் வறண்டிருப்பதைப் போலத் தற்காலிகமானது எது?

வள்ளலாக இருந்தவர் சிறிது காலம்
வறுமை உடைவது (குறள் 1010).

587. எது நாணம்?

தவறான செயல் செய்வதற்கு
வெட்கப்படுவது (குறள் 1011).

588. மரப்பொம்மை கயிற்றால் ஆடி உயிர் உள்ளதாகப் பொய்த் தோற்றம் தருவது போன்றது எது?

நாணம் இல்லாதவர் செயற்பாடு (குறள் 1020).

## எப்படி?

589. தீமை அழிந்து நன்மை பெருக வேண்டுமானால் நல்ல கருத்துகளை எப்படிச் சொல்ல வேண்டும்?

இனிமையாக (குறள் 96).

590. ஒழுக்கத்தை எப்படிப் பாதுகாக்க வேண்டும்?

உயிரைவிடச் சிறந்ததாகக் கருதிப்
பாதுகாக்கவேண்டும் (குறள் 131).

591. தனக்குத் துன்பம் செய்பவரை எப்படித் தண்டிக்க வேண்டும்?

அவர் நாணும்படி நல்லது செய்துவிட
வேண்டும் (குறள் 314).

592. ஒரு செயலை எப்படித் தொடங்க வேண்டும்?

நன்றாக எண்ணிப் பார்த்துத் தொடங்க
வேண்டும் (குறள் 467).

## எப்போது?

593. பொய்கூட எப்போது வாய்மைக்குச் சமமாகும்?

குற்றமில்லாத நன்மை தந்தால் (குறள் 292).

594. நினைத்தவை எல்லாம் எப்போது உடனே கிடைக்கும்?

கோபம் கொள்ளாதபோது (குறள் 309).

595. எப்போது பிறவித் துன்பங்கள் விலகும்?

பற்றுகளை விடும்போது (குறள் 349).

596. ஒருவருக்கு இன்பம் எப்போது தொடர்ந்து வரும்?

ஆசை என்னும் துன்பம் நீங்கினால் (குறள் 369).

597. நன்மையே செய்வதிலும் எப்போது தவறு உண்டாகும்?

அவரவர் பண்பை அறியாமல் செய்தால் (குறள் 469).

598. ஆட்சியாளரின் கருத்துகளுக்கு மக்கள் எப்போது கட்டுப்பட்டு நடப்பர்?

ஆட்சியாளர் நல்லாட்சி செய்தால்.

599. குடும்ப விளக்கு எப்போது ஒளிமங்கி அணைந்து போகும்?

சோம்பல் என்னும் மாசு படியும்போது (குறள் 601).

600. ஒரு செயலை நினைத்தது நினைத்தபடி எப்போது முடிக்க முடியும்?

மன உறுதி இருந்தால் (குறள் 666).

601. ஒரு நாடு எல்லா வளங்களும் பெற்றிருந்தாலும், எப்போது பயன் அற்றுப் போகும்?

நல்ல ஆசித் தலைவர் இல்லையானால் (குறள் 740).

602. எப்போது நட்பு சிதைந்துவிடும்?

இவர் இன்னார், நான் இன்னவர் என்று பிரித்துப் பார்க்கும்போது (குறள் 790).

603. எப்போது உயிர்மேல் ஆசை உண்டாகும்?

துன்பம் வரும்போது (குறள் 940).

604. எப்போது வறுமை ஒருவருக்கு இழிவைத் தராது?

சான்றாண்மை என்னும் மன உறுதி இருக்கும்போது (குறள் 989).

605. எப்போது இந்த உலகம் தாங்காது?

சான்றோர்கள் தம் பண்பிலிருந்து தவறும்போது (குறள் 990).

606. கயவர்கள் எப்போது பயன்படுவர்?

கரும்பைப் போல் பிழியும்போது (குறள் 1078).

## எவை?

607. அறம் அல்லாதவை எவை?

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் (குறள் 35).

608. ஆசை, கோபம், கலக்கம் என்னும் மூன்றின் அச்சம் கெடுமானால் எவை விலகும்?

துன்பங்கள் (குறள் 360).

609. உலகத்தின் இருவேறு செயற்போக்குகள் எவை?

செல்வம் சேர்ப்பதும் அறிவு வளர்ப்பதும் (குறள் 374).

610. ஆட்சியாளர் இயல்பாகப் பெற்றிருக்க வேண்டியவை யாவை?

அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் (குறள் 382).

611. ஆட்சியாளருக்கு நீங்காது இருக்க வேண்டிய பண்புகள் யாவை?

விழிப்போடு இருத்தல், கல்வித் தெளிவு, நெஞ்சுரம் (குறள் 384).

612. ஒரு நாட்டிற்கு உறுப்புகள் எவை?

கடல், ஆறு, மலை, மழை, கோட்டை (குறள் 737).

613. வழிவழியாக வந்த நல்ல குடும்பத்தில் பிறந்தவர்களிடம் இயல்பாக இருக்க வேண்டிய பண்புகள் எவை?

நகை, ஈகை, இன்சொல், இகழாமை (குறள் 953).

614. சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள் எவை?

அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை (குறள் 983).

615. பண்புடைமை என்னும் சிறப்பிற்கு அடிப்படையாக அமைவன எவை?

அன்புடைமை, நல்ல குடிப்பிறப்பு (குறள் 992).

616. ஒருவா தகுதி உடையவர், தகுதி இல்லாதவர் என்பதை எவற்றால் அறியலாம்?

அவருக்குப்பின் எஞ்சியுள்ள புகழ் முதலியவற்றால் (குறள் 114).

617. நாம் பிறருக்கு எவற்றைச் செய்யாதிருக்க வேண்டும்?

நமக்குத் துன்பம் தரும் என்று அறிந்தவற்றை (குறள் 316).

618. நல்ல குடும்பத்தில் பிறந்தவர்கள் எவற்றிலிருந்து தவறமாட்டார்கள்?

ஒழுக்கம், வாய்மை, நாணம் என்னும் மூன்றிலிருந்து (குறள் 952).

## என்ன?

619. திருக்குறளில் ''வேளாண்மை'' என்றால் என்ன பொருள்?

உதவி (குறள் 81).

620. ''பிறன் பொருளாள்'' என்பதற்கு என்ன பொருள்?

தன் கணவனுக்குச் சமுதாய மதிப்பைத் தருபவள் (குறள் 141).

621. ஒருவருடைய செல்வம் குறையாதிருக்க வழி என்ன?

பிறர் பொருளைக் கவர நினையாதிருப்பது (குறள் 178).

622. பிறரைக் குறை கூறுவதைவிட நாம் என்ன செய்யலாம்?

நம்மிடம் உள்ள குறைகளைத் திருத்திக் கொள்ளலாம் (குறள் 190).

623. உலகத்து மக்களை எல்லாம் பெரிதும் விரும்பும் அறிவுக்கு என்ன பெயர்?

பேரறிவு (குறள் 215).

624. திருடுவதில் உண்டாகும் ஆர்வம் முடிவில் என்ன செய்யும்?

தீராத துன்பம் தரும் (குறள் 284).

625. சிறுதுகூட யாருக்கும் தீமை தராமல் பேசும் பேச்சுக்கு என்ன பெயர்?

வாய்மை (குறள் 291).

626. தான் துன்பப்படக் கூடாது எனக் கருதுபவர் என்ன செய்ய வேண்டும்?

பிறருக்குத் துன்பம் செய்யக் கூடாது (குறள் 320).

627. நிலையில்லாத செல்வத்தைப் பெற்றால் உடனே என்ன செய்ய வேண்டும்?

நிலைபெறுவதற்கான செயல்களைச் செய்துவிட வேண்டும் (குறள் 333).

628. ''ஒட்பம்'' என்றால் என்ன?

மன உள்ளுணர்வு (குறள் 425).

629. தன் குடும்பம் சிறந்த குடும்பமாக விளங்கவேண்டும் என நினைப்பவர் என்ன செய்ய வேண்டும்?

சோம்பலை ஒழிக்க வேண்டும் (குறள் 602).

630. துன்பங்கள் வரும்போது என்ன செய்ய வேண்டும்?

மனம் கலங்காமல் அவற்றை எதிர்கொள்ள வேண்டும் (குறள் 625).

631. நல்லவர் கூட்டத்தில் திறமையாகப் பேசுபவர், தீயவர் கூட்டத்தில் என்ன செய்ய வேண்டும்?

மறந்தும் பேசுதல் கூடாது (குறள் 719).

632. பண்புடையவரிடம் நட்புக் கொள்வதால் என்ன பயன் கிடைக்கும்?

பழகப் பழக இன்பம் கிடைக்கும் (குறள் 783).

633. தீமை தருவதை ஏற்று, நன்மை தருவதை விட்டு விடுவதற்கு என்ன பெயர்?

பேதைமை (அறியாமை) (குறள் 831).

634. வேற்றுமை உணர்வு வளர்வதற்குத் தூண்டுகோலாக அமைந்தால் என்ன விளையும்?

துன்பமே மிகும் (குறள் 858).

635 ஒருவருக்கு இன்னொருவர் உதவுவதைக் கண்டு பொறாமை கொள்பவரின் சுற்றம் என்னாகும்?

உண்பதும் உடுப்பதும் இல்லாமல் கெடும் (குறள் 166).

636. மன உறுதி இல்லாதவர் தவம் மேற்கொண்டால் என்னாகும்?

கேடாக முடியும் (குறள் 262).

637. படிக்காதவற்றைப் படித்ததாகக் கூறி ஒருவர் நடித்தால் என்னாகும்?

அவர் தெளிவாக அறிந்தவற்றைக் கூடப் பிறர் ஐயப்படும் நிலை உருவாகும் (குறள் 845).

638. உட்பகைக் கொண்ட குடும்பம் என்னாகும்?

வலிமை குறைந்து அழியும் (குறள் 888).

639. பெரியவர்களை மதிக்காமல் நடந்தால் என்னாகும்?

அவர்களால் நீங்காத துன்பம் வந்தடையும் (குறள் 892).

640. செயல் ஆற்றல் உள்ளவர்க்குத் தீங்கு செய்தால் என்னாகும்?

தீங்கு செய்பவர் கெட நேரிடும் (குறள் 893).

641. பிறரோடு சிரித்துப் பழகி வாழத் தெரியாதவருக்கு வாழ்வு என்னாகும்?

பகலுங்கூட இருட்டாகித் தோன்றும் (குறள் 999).

642. நாணத்தை விட்டுவிட்டால் என்னாகும்?

சமுதாய நலம் கெடும் (குறள் 1019).

643. கொள்கையை விட்டுவிட்டால் என்னாகும்?

குடும்ப நலம் கெடும் (குறள் 1019).

## யார்?

644. எல்லா உலக உயிர்களிடமும் இரக்கம் செலுத்தி வாழும் அறவோர் யார்?

அந்தணர் (குறள் 30).

645. துறந்தார், துவ்வாதார், இறந்தார் ஆகிய மூவர்க்கும் துணையாவார் யார்?

குடும்பத் தலைவர் (குறள் 42).

646. புனிதமானவர் யார்?

மாட்சிமையுடைய மனைவி (குறள் 60).

647. எலும்பைத் தோலால் போர்த்திய உயிரற்ற உடம்பை உடையவர் யார்?

அன்பில்லாதவர் (குறள் 80).

648. அறம் தழைப்பதை விரும்பாதவர் யார்?

பிறர் உயர்வைக் கண்டு பொறாமை கொள்பவர் (குறள் 163).

649. யார் பொறாமைக் கொண்டு பொல்லாதன செய்யமாட்டார்?

பொறமைக் கொள்வதால் வரும் தீமையை அறிந்தவர் (குறள் 164).

650. தம் தன்னல இன்பத்திற்காக அறம் அல்லாதன செய்யாதவர் யார்?

சமுதாய இன்பத்தில் நாட்டம் கொள்பவர் (குறள் 173).

651. பொருள் இல்லையே என்று பிறர் பொருளைக் கவராதவர் யார்?

ஐம்புலன்களையும் வென்று தெளிந்த வுடையவர் (குறள் 174).

652. யார் எல்லோராலும் இகழப்படுவார்?

பலரும் வெறுக்கும்படியான பயனில்லாத பேச்சுகளைப் பேசுபவர் (குறள் 191).

653. யார் பிறருக்குத் தீமை செய்யாதிருக்க வேண்டும்?

தன்னைத் துன்பம் வருத்துவதை வேண்டாதவர் (குறள் 206).

654. வாய்ப்பில்லாத போதும் யார் பிறருக்கு உதவத் தயங்கமாட்டார்?

தம் கடமையைத் தெளிவாக அறிந்தவர் (குறள் 218).

655. சமுதாய மதிப்பையும் இழந்து, பிறப்பின் பயனையும் மறப்பவர்கள் யார்?

அருள் நீங்கி அல்லவை செய்பவர் (குறள் 246).

656. யார் அளவறிந்து வாழ முடியாது?

திருடுவதில் ஆர்வம் உடையர் (குறள் 286).

657. யார் நெஞ்சில் அறம் நீங்காமல் இருக்கும்?

அளவறிந்தார் நெஞ்சில் (குறள் 288).

658. இகழத்தக்க அற்ப அறிவினர் யார்?

நிலை இல்லாதவைகளை நிலையானவை என்று கருதுபவர் (குறள் 331).

659. பற்றுகளை விடுவதற்கு யார் பற்றினைப் பற்ற வேண்டும்?

பற்றினை விட்டவர் பற்றினை (குறள் 350).

660. தாம் இன்புறுவது உலகமும் இன்புறக் கண்டு அதனை விரும்புபவர் யார்?

கற்று அறிந்தார் (குறள் 399).

661. வண்ணம் தீட்டி அழகு செய்யப்பட்ட மண்பொம்மை போன்றவர் யார்?

சிறந்த ஆராய்ச்சி அறிவு இல்லாமல் அழகிய தோற்றம் மட்டும் உடையவர் (குறள் 407).

662. உண்மையான உள்ளுணர்வாளர் யார்?

உலகம் தழுவிய உணர்வுடையவர் (குறள் 425).

663. சமுதாய மதிப்பிற்குரிய வளர்ச்சியினை உடையவர் யார்?

இறுமாப்பு, சினம், இழிகுணம் இல்லாதவர் (குறள் 431).

664. தமக்குத் தெளிவாகத் தெரியாத எந்தச் செயலையும் செய்யாதவர் யார்?

தமக்கு இழிவு வரக்கூடாது என்று
அஞ்சுபவர் (குறள் 464).

665. ஒருவரிடம் தொடர்பு விட்டுப் போனாலும் பழைய உறவை நினைத்துப் பாராட்டுபவர் யார்?

சுற்றத்தார் (குறள் 521).

666. சுற்றத்தார் தொடர்ந்து சூழ்ந்திருக்குமாறு வாழபவர் யார்?

பிறருக்கு உதவியும் இனிமையாகப்
பேசியும் வாழ்பவர் (குறள் 525).

667. யார் ஆட்சி செய்யும் நாட்டில் பருவம் தவறாமல் மழை பெய்யும்?

செங்கோல் ஆட்சியாளர் (குறள் 545).

668. பலர் கடிந்தும், இகழ்ந்தும் பேசும் பேச்சுக்கு யார் ஆளாவார்?

சோம்பி இருந்து, நல்லுழைப்பு இல்லாமல் வாழ்பவர் (குறள் 607).

669. துன்பம் வரும்போது யார் கலங்கமாட்டார்?

இன்பம் வரும்போது மகிழாதவர் (குறள் 629).

670. பேச்சை நீண்டநேரம் வீணாக நீட்டிப் பேச ஆசைப்படுபவர் யார்?

நல்லனவற்றைச் சுருக்கமாகப் பேசத் தெரியாதவர் (குறள் 649).

671. மதிப்பைக் கெடுக்கும் செயல்களை யார் செய்யக் கூடாது?

உயர வேண்டுமென நினைப்பவர் (குறள் 653).

672. துன்பம் வந்த காலத்தும் இழிவான செயல்களைச் செய்யாதவர் யார்?

தெளிந்த அறிவுடையவர் (குறள் 654).

673. தாம் எல்லாம் அறிந்தவர் என எண்ணும் ஆர்வம் உடையவர் யார்?

புல்லறிவாளர் (குறள் 844).

674. மனிதப் பண்பாடு இல்லாதவர் யார்?

பிரிவினை உணர்வாளர் (குறள் 851).

675. தாழ்வு வந்தால் வாழாத மனம் உடையவரின் புகழை உலகோர் என்ன செய்வர்?

வணங்கி வாழ்த்துவர் (குறள் 970).

676. யாரிடத்தில் கோடி கோடியாகப் பணம் இருந்தும் பயன் இல்லை?

பிறருக்கு உதவுவதும் தான் அனுபவிப்பதும் இல்லாதவரிடத்தில் (குறள் 1005).

677. குடும்பப் பொறுப்பு யாரிடம் வந்து சேரும்?

குடும்பத்தை நடத்தும் திறமை உள்ளவரிடம் (குறள் 1027).

678. பெற்றவர்கள் தம்மைவிடத் தம் குழந்தைகளை அறிவுடையவர்களாக உருவாக்குவதால் யாருக்கு இன்பம்?

உலக உயிர்களுக்கு (குறள் 66).

679. நடுவுநிலை உடையவரின் வளர்ச்சி யாருக்குப் பாதுகாப்பாக அமையும்?

அவருடைய தலைமுறைக்கு (குறள் 112).

680. யாருக்கு மண்ணைப் போலவே விண்ணும் நெருக்கமாகத் தோன்றும்?

ஐயப்பாடு இல்லாத தெளிந்த அறிவினருக்கு (குறள் 353).

681. கற்ற நூல்களால் யாருக்குப் பயன் இல்லை?

அறிஞர்கள் கூடியுள்ள கூட்டத்தில் பேச அஞ்சுபவர்க்கு (குறள் 726).

682. கள் குடிப்பவர் யாருக்கு சமம்?

உயிரைப் போக்கும் நஞ்சை பண்பவருக்குச் சமம் (குறள் 926).

683. யாருக்கு நல்லவை எல்லாமே இயல்பான கடமைகள்?

தம் கடமை அறிந்த சான்றோர்களுக்கு (குறள் 981).

684. யாருடைய உறவை ஆராய்ந்து முறையறிந்து பெற வேண்டும்?

அறநெறிகளை அறிந்து தெளிந்த அறிவுடையவர் உறவை (குறள் 441).

685. ஒரு செயலை வெற்றிகரமாகச் செய்திட எண்ணுபவர் யாருடைய கருத்தை அறிய வேண்டும்?

முன்னரே அச்செயலைச் செய்து அனுபவப்பட்டவர் கருத்தை (குறள் 677).

686. பெருமைக்கு உரியவர்கள் யாரைக் கண்டு அஞ்சுவார்கள்?

அற்பர்களைக் கண்டு (குறள் 441).

687. கொடுங்கோல் ஆட்சியாளர் யாரைத் தனக்குப் பாதுகாப்பாக்கிக்கொள்வார்?

ஆட்சி நெறி அறியாத மூடர்களை (குறள் 570).

688. உலகம் யாரை மதிக்காது?

எடுத்த செயலில் உறுதி இல்லாதவரை (குறள் 670).

689. நல்லவர்கள் யாரை மதிக்க மாட்டார்கள்?

கள் குடியரை (குறள் 922).

## எத்தனை?

690. சிரித்து விளையாடுவதற்காக மட்டுமே வரும் நண்பனை விட, பகைவரால் எத்தனைப் பங்கு நன்மை கிடைக்கும்?

பத்துக்கோடி (குறள் 817).

691. ஒரு செயலை மேற்கொள்ளும்போது எத்தகைய எண்ணம் வேண்டும்?

அதில் புகழ் பெற வேண்டும் என்ற எண்ணம் (குறள் 236).

692. நிலை இல்லாதவைகளை நிலையானவை என்று கருதும் அறிவு எத்தகைய அறிவு?

அற்ப அறிவு (குறள் 331).

693. இவ்வுலகம் எத்தகைய பெருமையை உடையது?

''நேற்று இருந்தவர் இன்று இல்லை'' என்னும் பெருமை (குறள் 336).

694. கல்வியால் எத்தகைய உணர்வு தோன்றும்?

''எல்லா நாடும் தன் நாடு, எல்லா ஊரும் தன் ஊர்'' என்னும் உணர்வு (குறள் 397).

695. எத்தகைய ஆட்சியாளர் தன் நாட்டை நாள்தோறும் கொஞ்சங் கொஞ்சமாக இகழப்பார்?

நாள்தோறும் நாட்டின் நிலையை அறிந்து, சரியாக ஆட்சி செய்யாத ஆட்சியாளர் (குறள் 553).

696. நல்லவர் பழிக்கும்படியான செயல்களை எத்தகைய சூழலில்கூடச் செய்யக்கூடாது?

பெற்ற தாயே பசியில் துடிப்பதைக் கண்டபோதும் (குறள் 656).

697. எத்தகைய செல்வத்தை ஏற்காமல் விட்டு விட வேண்டும்?

அருளும் அன்பும் இல்லாமல் தீய வழியில் வரும் செல்வத்தை (குறள் 756).

698. எத்தகைய பேதையைவிடப் பேதையார் இல்லை?

படித்து அறிந்து, அதனைப் பிறர்க்குச் சொல்லியும், அதன்படி நடக்காதவரைவிட (குறள் 834).

699. எத்தகைய செல்வம் கொள்ளை போகும்?

அன்பையும் அறத்தையும் கருதாமல் சேர்த்த செல்வம் (குறள் 1009).

700. உழவர்கள் எத்தகைய பெருமைக்கு உரியவர்கள்?

உலகம் என்னும் தேருக்கு அச்சாணி போன்றவர்கள் (குறள் 1032).

701. பெற்ற தாய், எத்தகைய மகனை அயலானாகக் கருதுவாள்?

அறத்திற்குப் புறம்பாகச் சென்று வறுமை அடையும் மகனை (குறள் 1047).

702. பொறாமை எத்தகையது?

தன்னை உடையவருக்குக் கேடு தந்தே தீருவது (குறள் 165).

703. கோபம் எத்தகையது?

தன்னைக் கொண்டவரையே கொன்று விடுவது (குறள் 305).

704. நல்லவர் உறவை விட்டுவிடுவது எத்தகையது?

பலரைப் பகையாக்கிக் கொள்வதைவிடப் பத்து மடங்கு தீமை தருவது (குறள் 450).

705. பிரிவினை எண்ணம் எத்தகையாது?

உயிரின வாழ்க்கைக்கு மாறுபட்டது; மனிதப் பண்பாடு இல்லாதது; விரைந்து பரவும் நோய் போன்றது (குறள் 851).

706. சூது எத்தகையது?

பல இழிவுகளை உண்டாக்கிச் சமுதாய மதிப்பை எல்லாம் அழித்து ஒழிப்பது (குறள் 934).

707. நல்ல குடும்பத்தில் பிறந்தவரிடம் காணும் குற்றம் எத்தகையது?

முழு நிலவில் தோன்றும் களங்கம் போல் பளிச்செனத் தோன்றுவது (குறள் 657).

708. சிறப்புடைய மனைவி எத்தகையவள்?

புனிதமானவள் (குறள் 60).

709. பெரியவர் எத்தகையவர்?

வந்த துன்பத்தை நீக்கி, இனி துன்பம் வராதபடி முன்னதாகக் காக்க வல்லவர் (குறள் 442).

710. ஒரு நாட்டில் எத்தகையவர் இல்லாதிருக்க வேண்டும்?

தனிநலக் கும்பல், உட்பகைவர், ஆட்சியாளரை நடுங்கச்செய்யும் கொடியவர் (குறள் 735).

711. எத்தகையவர் நட்பை, ஒன்று கொடுத்தும் கொள்ள வேண்டும்?

நல்ல குடியில் பிறந்து, தமக்கு வரும் பழிக்கு நாணுபவர் நட்பை (குறள் 794).

712. நட்பால் கிடைக்கும் பயனை எடைபோட்டுப் பார்ப்பவர் எத்தகையோருக்குச் சமமாவார்?

பரத்தையருக்கும் திருடருக்கும் (குறள் 813).

713. எத்தகையோர் நட்பைவிடத் தனித்து இருப்பதே சிறந்தது?

போர்க்களத்தில் தள்ளிவிட்டு ஓடும் பொல்லாத குதிரையைப் போன்றவரின் நட்பைவிட (குறள் 814).

714. எத்தகையவர் நட்பைவிட அறிவுடையவரின் பகை, கோடி மடங்கு நல்லது?

அறிவில்லாதவரின் மிக நெருங்கிய நட்பைவிட (குறள் 816).

715. எத்தகையவர் நட்பு அஞ்சத்தக்கது?

வெளிப்பார்வைக்குச் சிரித்துப் பேசி உள்ளுக்குள் தீமை நினைக்கும் வஞ்சகர் நட்பு (குறள் 824).

716. எத்தகையோர் சிறப்பை உலகோர் வணங்கி வாழ்த்துவர்?

தாழ்வு வந்தால் வாழாத மானம் உடையவர் சிறப்பை உடையவர் (குறள் 970).

## எதனை?

717. பிற தெய்வங்களை நினைக்காமல் தன் கணவனை நினைத்துத் தன் கடமைகளை ஆற்றும் மனைவி எதை ஏவல் கொள்வார்?

மழையை (குறள் 55).

718. திருவள்ளுவர் ''சிறை'' என எதனைக் கூறுகின்றார்?

மகளிரைப் பூட்டிவைத்து அடிமை செய்யும் குடும்பத்தை (குறள் 57).

719. ''மழலைச்சொல் கேளாதவர்'' என்னும் தொடர் எதனை நயமாகச் சுட்டுகிறது?

குழந்தைப் பேறு அற்றவர்கள் (மலடன், மலடி) என்பதை (குறள் 66).

720. உலகத்து மக்களையெல்லாம் பெரிதும் விரும்புகின்ற பேரறிவாளர் பெற்ற செல்வம் எதைப் போன்றது?

ஊருணி நீரால் நிறைந்தது போன்றது (குறள் 215).

721. உலகத்திற்காகவே வாழும் நல்லுணர்வாளரிடம் சேரும் செல்வம் எதைப் போன்றது?

பயன்மரம் ஊரின் நடுவே பழுத்தது போன்றது (குறள் 216).

722. பெருந்தகையாளரிடம் சேரும் செல்வம் எதைப் போன்றது?

முழுமையும் பயன்படும் மூலிகை மரம் போன்றது (குறள் 217).

723. அருள் இல்லாதவர் அறம் செய்வது எதைப் போன்றது?

அறிவுத் தெளிவு இல்லாதவர், மெய்ப்பொருளை உணர்வது போன்றது (குறள் 249).

724. மனத்தை அடக்கும் வலிமை இல்லாதவர் தவ வேடம் போட்டு ஏமாற்றுவது எதைப் போன்றது?

பசு, புலித்தோல் போர்த்திப் பயிரை மேய்வது போன்றது (குறள் 273).

725. தவவேடத்தில் மறைந்துகொண்டு, தவறான செயல்களைச் செய்வது எதைப் போன்றது?

புதரில் மறைந்துகொண்டு வேடன் பறவைகளைப் பிடிப்பது போன்றது (குறள் 274).

726. மழித்தலும் நீட்டலும் வேண்டா எனத் திருவள்ளுவர் எதனைச் சுட்டுகிறார்?

தலையை மொட்டை அடிப்பதிலும், நீண்ட சடைமுடியை வளர்ப்பதிலும் கவனம் செலுத்திக் காலத்தை வீணாக்குவதை (குறள் 280).

727. பெருஞ்செல்வம் வருவதும் போவதும் எதைப் போன்றது?

நாடக அரங்கிற்கு மக்கள் வருவதும் போவதும் போன்றது (குறள் 332).

728. உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு எதைப் போன்றது?

முட்டைக்கும் அதனுள் இருக்கும் பறவைக்கும் இடையேயுள்ள தொடர்பு போன்றது (குறள் 338).

729. எதனை விட்டவரைத் துன்பங்கள் பற்றுவது இல்லை?

பற்றுகளை (குறள் 347).

730. துறந்தவர் என்பவர் எதனைத் துறந்தவர்?

ஆசையை (குறள் 365).

731. போதுமான நூல்கள் படிக்காமல் படித்தவர் கூட்டத்தில் பேச விரும்புவது எதைப் போன்றது?

கட்டம் போடாமல் பகடை ஆடுவது போன்றது (குறள் 401).

732. படிக்காதவர்கள் எதைப் போன்றவர்கள்?

பயன்படாத களர்நிலம் போன்றவர்கள் (குறள் 408).

733. சிறந்த ஆராய்ச்சி அறிவு இல்லாதவரின் தோற்றம் எதைப் போன்றது?

வண்ணம் தீட்டி அழகு செய்யப்பட்ட மண் பொம்மை போன்றது (குறள் 407).

734. ஒழுக்கம் உடையவர்கள் வாயிலிருந்து வரும் சொற்கள் எதைப் போன்றவை?

வழுக்கல் நிலத்தில் உதவும் கைத்தடி போன்றவை (குறள் 415).

735. வருமுன் தன்னைக் காத்துக் கொள்ளாதவர் வாழ்க்கை எதைப் போன்றது?

நெருப்பின் பக்கத்தில் வைக்கப்பட்ட வைக்கோல் போர் போன்றது (குறள் 435).

736. எதனை அறிந்து ஒரு வேலையை ஒருவரிடம் ஒப்படைக்க வேண்டும்?

ஒரு வேலையை ''இன்ன வகையில், இவர் முடிக்கக் கூடியவர்'' என்பதை அறிந்து (குறள் 518).

737. சுற்றத்தாரிடம் மனம் விட்டுப் பேசிப் பழகாதவர் வாழ்க்கை எதைப் போன்றது?

குளப்பரப்பானது கரையே இல்லாமல் தண்ணீரால் நிறைந்தது போன்றது (குறள் 523).

738. கொலை போன்ற கொடுமை செய்பவரை ஆட்சியாளர் தண்டிப்பது எதைப் போன்றது?

பயிர்களுக்கு இடையே உள்ள களைகளை நீக்குவது போன்றது (குறள் 550).

739. இரக்கமே இல்லாத ஆட்சியாளர் ஆட்சியில் மக்கள் படும் துன்பம் எதைப் போன்றது?

மழையே இல்லாமல் உலக உயிர்கள் படும் துன்பம் போன்றது (குறள் 557).

740. கண்ணுக்கு வேண்டிய இரக்கம் இல்லாதவர் எதைப் போன்றவர்?

மண்ணோடு பொருந்திய மரம் போன்றவர் (குறள் 576).

741. இலஞ்சம் போன்ற தீய வழிகளில் செல்வம் சேர்த்து அதைப் பாதுகாப்பது எதைப் போன்றது?

பச்சை மண்குடத்தில் நீர் ஊற்றிப் பாதுகாப்பது போன்றது (குறள் 660).

742. பலதுறை அறிவு பெற்றவர் முன் தவறாகப் பேசுவது எதைப் போன்றது?

ஆற்று வெள்ளத்தில் நீத்துபவர் கால் தளர்வது போன்றது (குறள் 716).

743. தனக்குத் தகுதி இல்லாதவர்முன் பேசும் பேச்சு எதைப் போன்றது?

சாக்கடையில் கொட்டிய அமிழ்தம் போன்றது (குறள் 720).

744. அறிஞர்கள் கூட்டத்தில் பேச அஞ்சுபவர் பெற்ற படிப்பறிவு எதைப் போன்றது?

போர்க்களத்தில் பேடி பிடித்த கூரிய வாள் போன்றது (குறள் 727).

745. நல்லவர் நட்பு எதனைப் போல வளரும்?

வளர்பிறைப் போல (குறள் 782).

746. உள்ளத்தில் நட்புக் கொள்ளாமல் உதட்டளவில் நட்புக் கொள்பவர் எதைப் போன்றவர்?

தக்க சமயத்தில் வேட்டுவதற்குத் துணை நிற்கும் பட்டடைப் போன்றவர் (குறள் 821).

747. பகைவரின் பணிவான சொல் எதைப் போன்றது?

வில் வளைவதைப் போன்றது (குறள் 827).

748. அறிஞர்கள் கூடியுள்ள கூட்டத்தில் அறிவிலி செல்வது எதைப் போன்றது?

கழுவாத காலினைப் பள்ளியில் வைப்பது போன்றது (குறள் 840).

749. உடம்பாடு இல்லாதவர் வாழ்க்கை எதைப் போன்றது?

சிறு குடிசையில் பாம்புடன் சேர்ந்து வாழ்வது போன்றது (குறள் 890).

750. கள் குடித்து மயங்கிக் கிடக்கும் நிலையில் உள்ள ஒருவரைத் திருத்த முயற்சிப்பது எதைப் போன்றது?

நீரின் அடியில் மூழ்கிக் கிடப்பவரைத் தீப்பந்தம் கொண்டு தேடுவது போன்றது (குறள் 629).

751. சூதில் கிடைக்கும் வெற்றி எதைப் போன்றது?

தூண்டில் முள்ளை மீன் விழுங்கியது போன்றது (குறள் 931).

752. மானக்கேடு வருமானால் உயிரைவிட்டு விடுபவர் எதைப் போன்றவர்?

தன் உடலை விட்டு முடி நீங்குமானால் உயிர் வாழாத கவரி போன்றவர் (குறள் 963).

753. பண்பு இல்லாதவர் பெற்ற பெரிய செல்வம் எதைப் போன்றது?

தூய்மைக் கேடான பாத்திரத்தில் வைக்கப்பட்ட நல்ல பாலைப் போன்றது (குறள் 1000).

754. ஏழைகளுக்கு வேண்டுவன கொடுத்து உதவாதவருடைய செல்வம் எதைப் போன்றது?

அழகான ஒரு பெண் தனியே வாழ்ந்து முதுமை அடைவது போன்றது (குறள் 1007).

755. பிறரால் விரும்பப்படாதவருடைய செல்வம் எதைப் போன்றது?

ஊர் நடுவே கொடிய நச்சு மரம் பழுத்ததைப் போன்றது (குறள் 100).

756. வள்ளலாக இருந்தவர் சிறிது காலம் வறுமை அடைவது விருந்தோம்பல் (குறள் 87).

764. ஒருவர் பெற்ற எல்லா மதிப்புகளையும் கெடுத்துவிடுவது எது?

அவர் ஒரே ஒரு தீய சொல் பேசுவதால் வரும் தீமை (குறள் 128).

765. சான்றோர்க்குப் ''பேராண்மை'' எது?

இன்னொருவர் மனைவியைத் தவறாக நினையாமை (குறள் 148).

766. தமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டிப்பது, ஒருவர் செய்த தீங்கைப் பொறுத்துக் கொள்வது—இவற்றுள் எது சிறந்தது?

ஒருவர் செய்த தீங்கைப் பொறுத்துக் கொள்வது (குறள் 156).

767. உண்ணாமல் நோன்பிருப்பது, பிறர் சொல்லும் தீய சொற்களைப் பொறுத்துக் கொள்வது—இவற்றுள் எது சிறந்தது?

பிறர் சொல்லும் தீய சொற்களைப் பொறுத்துக் கொள்வது (குறள் 160).

768. பொருளையும் அழித்துத் தீய வழியிலும் செல்ல வைக்கும் பாவச் செயல் எது?

பொறாமை (குறள் 169).

769. அறத்தைப் பழித்துப் பேசித் தீமைகள் செய்வதைவிடத் தீமையானது எது?

ஒருவன் இல்லாதபோது பழித்துப் பேசி இருக்கும்போது பொய்யாகச் சிரித்துப்பேசுவது (குறள் 182).

770. ஒருவர் சமுதாயப் பொறுப்பு இல்லாதவர் என்பதை எது காட்டும்?

பயன் இல்லாமல் விரிவாகப் பேசும் பேச்சு (குறள் 193).

771. ''தலைமையான அறிவு'' எது?

தமக்குத் தீங்கு செய்தவர்க்கும் தீங்கு செய்யாதிருப்பது (குறள் 203).

772. ''கடமையைச் செய்; பலனை எதிர்பார்க்காதே'' என்பது கீதை. இதே கருத்துச் சாயலுடைய குறள் எது?

''கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு என் ஆற்றும் கொல் உலகு'' (குறள் 211).

773. தமக்குக் கிடைத்த உணவைப் பிறரோடு பங்கிட்டுச் சாப்பிடும் பழக்கம் உள்ளவரை எது தீண்டாது?

பசி என்னும் கொடிய நோய் (குறள் 277).

774. பிச்சை எடுப்பதைவிடக் கொடிய செயல் எது?

தன்னிடம் உள்ள ஏராளமானப் பொருளைத் தான் மட்டுமே தனித்து உண்பது (குறள் 229).

775. பிறப்பின் பயன் எது?

ஏழைகளுக்கு உதவி, அதனால் புகழ் பெறுவது.

776. ஒருவர் தம்மைவிட மெலியவரைத் துன்புறுத்தும்போது எண்ணிப்பார்க்க வேண்டியது எது?

தம்மைவிட வலியவர்முன் தாம் உடையும் துன்பம் (குறள் 250).

777. அவிசொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்வதைவிட எது உயர்ந்தது?

ஓர் உயிரைக் கொன்று அதனை உண்ணாமல் இருப்பது (குறள் 259).

778. தவத்திற்கு அழகு எது?

தனக்கு வரும் துன்பத்தைப் பொறுத்தலும், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாது இருத்தலும் (குறள் 261).

779. தவம் செய்வோரைத் துன்பம் வருத்த வருத்த எது பெருகும்?

மெய்யுணர்வு (குறள் 267).

780. உலகத்து உயிர்கள் எல்லாம் ஒருவரை வணங்கக் காரணமாக அமைவது எது?

தன் உயிர், தான் என்னும் எண்ணங்களிலிருந்து விடுபடுவது (குறள் 268).

781. இலர் பலராக இருப்பதற்கு எது காரணம்?

உடமையைச் செய்பவர் சிலராகவும் செய்யாதவர் பலராகவும் இருப்பது (குறள் 270).

782. ஒருவரின் உடலில் கலந்துள்ள ஐம்பூதங்களின் நகைப்பிற்கும் காரணமாக அமைவது எது?

வஞ்ச மனம் கொண்டவரின் பொய்யான ஒழுக்கம் (குறள் 271).

783. முடிவில் தீராத துன்பம் தருவது எது?

திருடுவதில் உண்டாகும் ஆர்வம் (குறள் 284).

784. காரறிவாண்மை (வஞ்சனை உணர்வு) எது?

களவு (பிறர் பொருளைத் திருட
நினைப்பது) (குறள் 287).

785. எது வாய்மை?

யாருக்கும் சிறிதுகூடத் தீமை தராமல் பேசும்
சொற்கள் (குறள் 291).

786. எது வாய்மைக்குச் சமமாகக் கருதப்படும்?

குற்றம் இல்லாத நன்மை தரும் பொய்மை (குறள் 292).

787. உலக மக்களின் உள்ளங்களில் எல்லாம் வாழுமாறு
செய்யவல்லது எது?

மனமறியப் பொய் பேசாமல் வாழும்
வாழ்க்கை (குறள் 294).

788. குற்றம் இல்லாதவர் நெறி எது?

பெருமை தரும் செல்வம் பெறுவதாக இருந்தாலும்,
பிறருக்குத் துன்பம் தராமல் பெறுவது (குறள் 311).

789. அறிவின் பயன் எது?

பிற உயிர்படும் துன்பத்தைத் தன் துன்பமாகக்
கருதுவது (குறள் 351).

790. எது தலைமையான அறம்?

பங்கிட்டுக் கொடுத்? உலக உயிர்களைக்
காப்பது (குறள் 322).

791. எது நல்லாறு?

எந்த உயிரையும் கொல்லாமல் வாழும் நெறி (குறள் 324).

792. தன் உயிரே போவதாக இருந்தாலும் எது செய்தல் கூடாது?

இன்னோர் உயிரைக் கொல்லும் செயல் (குறள் 328).

793. பிறப்பு எது போன்றது?

தூங்கி விழிப்பது போன்றது (குறள் 339).

794. வானோர்க்கும் மேலான உலகை அடைய வழி வகுப்பது எது?

நான், எனது என்னும் ஆணவத்தை விட்டு விடுவது (குறள் 346).

795. ஒருவனை வஞ்சிப்பது எது?

அவா (குறள் 366).

796. துன்பத்துள் துன்பம் எது?

ஆசை (குறள் 369).

797. ஆட்சித் தலைவரைத் தெய்வமாகக் கருதச் செய்வது எது?

நடுவுநிலை தவறாமல் ஆட்சி செய்து மக்களைக் காப்பாற்றும் செயல் (குறள் 388).

798. உண்மையான உள்ளுணர்வு எது?

உலகத்தைத் தழுவி நிற்பது (குறள் 425).

799. எவ்வகைக் குற்றத்தோடும் வைத்து எண்ண முடியாத பெரிய குற்றம் எது?

உள்ளத்தில் பொருளைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளும் கஞ்சத்தனம் (குறள் 483).

800. எது வலிமைகள் எல்லாவற்றிலும் தலைமையான வலிமையாகும்?

தம்மைவிடப் பெரியவரைத் தமக்கு உறவாகச் செய்வது (குறள் 444).

801. இருப்பதுபோலத் தோன்றி இல்லாது போவது எது?

வருவாயின் அளவு அறிந்து அதற்குத் தக்கபடி வாழாதவர் வாழ்க்கை (குறள் 479).

802. சுற்றத்தார்க்கே உரிய பண்பு எது?

தொடர்பு விட்டுப்போன காலத்திலும் பழைய உறவை நினைத்துப் பாராட்டுவது (குறள் 521).

803. எது அளவுகடந்த கோபம் கொள்வதைவிடத் தீமையானது?

மிகுந்த மகிழ்ச்சிப் பெருக்கினால் கடமையை மறப்பது (குறள் 531).

804. எது செங்கோல் முறையாகும்?

செய்த குற்றத்தை ஆராய்ந்து யாருக்கும் இரக்கம் காட்டாமல் சமநிலையில் நின்று குற்றத்திற்கு ஏற்ற தண்டனை விதிப்பது (குறள் 541).

805. நேர்மை இல்லாத ஆட்சியாளரின் ஆட்சியில் வறுமையை விடக் கொடிய துன்பம் எது?

பொருள் உடையவராக வாழ்வது (குறள் 558).

806. ஆட்சிநெறி அறியாத மூடர்களைத் தனக்குப் பாதுகாப்பாக்கிக் கொள்வது எது?

கொடுங்கோல் ஆட்சி (குறள் 570).

807. இந்த உலகிற்கு வீண் சுமை எது?

இரக்க உணர்வு இல்லாதவர்கள் உயிரோடு வாழ்வது (குறள் 572).

808. தலைசிறந்த பண்பு எது?

தண்டிக்கத்தக்க குற்றம் செய்தவரிடமும் இரக்கம் காட்டி, அக்குற்றத்தைப் பொறுத்துக் கொள்வது (குறள் 579).

809. எது ''நயத்தக்க நாகரிகம்''?

தமக்கு வேண்டியவர் நஞ்சினைக் கொடுத்தாலும் அதனை ஏற்றுக் குடிப்பது (குறள் 580).

810. எது ஒருவருக்கு மன வலிமை?

ஊக்கம் (குறள் 600).

811. குடும்ப விளக்கை அணைக்கும் மாசு எது?

சோம்பல் (குறள் 901).

812. விடா முயற்சியுடன் உழைப்பவரிடம் எது இருக்கும்?

பிறருக்கு உதவவேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம் (குறள் 613).

813. உழைப்பு இல்லாதவர் செய்யும் உதவி எது போன்றது?

போர் செய்ய பேடி தன் கையில் வாள் எடுத்தது போன்றது (குறள் 614).

814. திருமகள் தங்கும் இடம் எது?

முயற்சி உள்ளவர் காலடி (குறள் 617).

815. எது சமுதாயப் பழி?

இருக்கின்ற உறுப்புகளால் செய்யக்கூடிய செயல்களை அறிந்து செய்யாதிருப்பது (குறள் 618).

816. செய்யக்கூடாதது எது?

ஏன் இந்தத் தவற்றைச் செய்தோம் என்று பின்னர் வருந்தும்படியான செயல் (குறள் 655).

817. செயலாண்மை என்பது எது?

ஒரு செயல் முடிந்தபின் அதனை வெளிப்படுத்துவது (குறள் 663).

818. ஆராய்ச்சியின் முடிந்த பயன் எது?

ஒன்றில் துணிவு பெறுவது (குறள் 677).

819. ஒரு செயலைச் செய்ய வேண்டிய நெறி எது?

மெல்ல செய்யவேண்டிய செயல்களை மெல்ல செய்ய வேண்டும்; விரைந்து செய்யவேண்டிய செயல்களை விரைந்து செய்ய வேண்டும் (குறள் 672).

820. அரைகுறையாக விட்ட செயல் எது போன்றது?

அணைக்காமல் விட்ட சிறு நெருப்புப் போன்றது (குறள் 674).

821. ஒரு செயல் செய்யும்போது அதனோடு தொடர்புடைய இன்னொரு செயலையும் செய்து முடிப்பது எது போன்றது?

பழக்கப்பட்ட யானையைக் கொண்டு புதிய யானையைப் பிடிப்பது போன்றது (குறள் 678).

**822.** நல்லன அனைத்தினும் நல்லது எது?

பேரறிஞர்கள் கூடியுள்ள கூட்டத்தில் முந்திக்கொண்டு பேசாத தன்னடக்கம் (குறள் 715).

**823.** எது தலைசிறந்த நாடு?

கேடு அறியாததாய், கேடு வரினும் வளம் குறையாததாய் உள்ள நாடு (குறள் 736).

**824.** சிறப்பிற்குரிய நாடு எது?

பிற நாடுகளைக் கையேந்தி நிற்காத அளவிற்கு வளம் பெற்ற நாடு (குறள் 739).

**825.** ஊராண்மை எது?

வாய்ப்பு நேரும்போது ஊரை ஆளும் திறன் (குறள் 773).

**826.** தாமே உணரவல்ல அறிவுடையார்முன் பேசுதல் எது போன்றது?

தானே வளர்கின்ற பயிர் நிறைந்த பாத்தியில் நீர் ஊற்றுவது போன்றது (குறள் 718).

**827.** எது கனவிலும் துன்பம் தரும்?

சொல் வேறு செயல் வேறாக இருப்பவர் நட்பு (குறள் 819).

**828.** எது அறியாமை எனப்படும்?

தீமை தருவதை ஏற்று நன்மை தருவதை விட்டுவிடுவது (குறள் 831).

**829.** ஒருவர் தெளிவாக அறிந்தவற்றைக் கூடப் பிறர் ஐயப்படுமாறு செய்வது எது?

ஒருவர் படிக்காதவற்றைப் படித்ததாகக் கூறி நடிப்பது (குறள் 845).

**830.** எது குற்றப்படுவதும் கெடுவதும் உறுதி?

பிறரிடம் வேற்றுமை உணர்வு கொண்டு வாழ்வதே இன்பமானது என்று கருதுபவருடைய வாழ்க்கை (குறள் 865).

**831.** ஒருவருக்குத் தலைசிறந்த தற்காப்பு எது?

எடுத்த செயலை முடிப்பவர் திறமையைப் பழிக்காதிருப்பது.

**832.** வினையாற்றலை விரும்புபவர் செய்யக் கூடாத செயல் எது?

பல மனைவியரை விரும்புவது (குறள் 901).

**833.** மிகப் பெரிய வெட்கக்கேடாகித் தலைகுனிவைத் தருவது எது?

பல பெண்களை விரும்புபவருடைய வளர்ச்சி (குறள் 902).

**834.** ஒருவருக்குப் பெருமை தருவது எது?

உள்ளத்தின் ஊக்க மிகுதி (குறள் 971).

**835.** எது சிறப்பிற்குரியதாகக் கருதப்படாது?

செய்கின்ற தொழில் வகை வேறுபாட்டால் வரும் உயர்வு தாழ்வு (குறள் 972).

836. சான்றோர்க்குரிய சிறப்பு எது?

உயர்ந்த குணங்களால் முழுமைப் பெற்று விளங்குவது (குறள் 982).

837. எது சான்றாண்மை?

பிறர் செய்த தீமையைப் பெரிதுபடுத்திச் சொல்லாமை (குறள் 984).

838. ஒருவரின் சான்றாண்மைக்கு உரைகல் எது?

தோல்வியைத் தம்மைவிடத் தாழ்ந்தவரிடத்தும் ஒத்துக்கொள்வது (குறள் 989).

839. எது உலகத்திற்குச் சுமையானது?

பொருள் சேர்ப்பதையே பிடிப்பாகக் கொண்டு புகழை விரும்பா ஒருவரின் பிறப்பு (குறள் 1003).

840. ஒருவரை உலகமே உறவாகக் கொள்ள வழிவகுப்பது எது?

தான் ஒரு குற்றமும் இல்லாதவராகித் தன் குடி உயர உழைக்கும் ஒருவரின் உழைப்பு (குறள் 1025).

841. நல்லாண்மை எது?

தான் பிறந்த குடும்பத்தை ஆளும் திறமையை உண்டாக்கிக் கொள்வது (குறள் 1026).

842. இந்த உலகையே கொடுத்தாலும் ஈடாகாத சிறப்பினையுடைய பண்பு எது?

வறுமையிலும் பிச்சை எடுக்காமல் வாழும் பண்பு (குறள் 1064).

843. ஒருவர் தமக்குச் செய்த தீமையைப் பொறுத்துக் கொள்பவர்க்குப் புகழ் எதுவரை நிலைத்து இருக்கும்?

உலகம் உள்ளவரை (குறள் 156).

## எந்த?

844. ஒருவருடைய முயற்சி எந்த அளவிற்குப் பயன்படும்?

அவர் உடலை வருத்திப் பாடுபட்ட அளவிற்குக் கூலியைக் கொடுக்கும் (குறள் 619).

845. பேச்சுத் திறன் எந்த அளவினதாக அமைய வேண்டும்?

தம் பேச்சை யாராலும் வெல்ல முடியாது என்ற அளவினதாக (குறள் 645).

## எப்படி?

846. தம்முடைய பணம், பதவி இவற்றின் மிகுதியால் நமக்குத் தீங்கு செய்பவரை நாம் எப்படி வெல்ல வேண்டும்?

நம் தகுதியால் (குறள் 158).

847. ஒரு நாடு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்?

குறையாத கனிவளம், செயல் வல்லார், மதிப்பிற்குரிய செல்வர் ஆகியோர் சேர்ந்ததாக (குறள் 731).

848. உலகின் போக்கு எப்படி உள்ளது?

ஏழையை இகழ்வது, செல்வரைப் புகழ்வது (குறள் 752).

## எப்போது?

849. தன்னைப் பழிப்பவர்முன் ஓர் ஆடவர் எப்போது தலை நிமிர்ந்து ஏறுபோல் பீடு நடை நடக்க முடியும்?

புகழ்படைத்த மனைவி இருக்கும்போது (குறள் 59).

850. ஒருவர் பெற்ற கூரிய, பரந்த அறிவு எப்போது பயன் அற்றுப் போகும்?

பிறர் பொருளை விரும்பித் தீய செயலைச் செய்யும்போது (குறள் 175).

851. சிறந்த பாண்பாளரின் வளர்ச்சியும் மதிப்பும் எப்போது கெடும்?

பயனில்லாத பேச்சுகளைப் பேசும்போது (குறள் 195).

852. துன்பமான சாவுகூட எப்போது இன்பமாகும்?

ஏழைக்கு உதவ முடியாதபோது (குறள் 230).

853. துறவி போன்ற உயர்ந்த தோற்றம் எப்போது பயனில்லாமல் போகும்?

மனமறியக் குற்றம் செய்யும்போது (குறள் 272).

854. எப்போது பிறப்பு பெருமை இல்லாது போய்விடும்?

பொய்யானவற்றை மெய்யானவை என்று எண்ணும்போது (குறள் 351).

855. எப்போது பிறப்பு நோய் விலகும்?

ஆசை, சினம், மயக்கம் என்னும் மூன்றன் அச்சம் நீங்கும்போது (குறள் 360).

856. எப்போது நட்புரிமை கெடும்?

''நீண்ட கால நண்பர்கள் யாம்'' என நினைத்துத் தகாதன செய்யும்போது (குறள் 700).

857. எப்போது பேரின்ப வாழ்வு கிடைக்கும்?

வேற்றுமை உணர்வு நீங்கும்போது (குறள் 854).

858. பெரியவர்களால் ஒருவருக்கு எப்போது நீங்காத துன்பம் வந்தடையும்?

பெரியவர்களை மதிக்காமல் நடக்கும்போது (குறள் 892).

859. எப்போது மருந்தே தேவையில்லை?

முன்பு உண்ட உணவு செரித்ததை அறிந்து, அதன்பின் உண்ணும்போது (குறள் 942).

860. எப்போது உயிருக்குத் துன்பம் இல்லை?

உடலுக்கு ஒத்துக்கொள்ளும் உணவை அளவோடு உண்ணும்போது (குறள் 945).

861. குன்றுபோல உயர்ந்தவரும் எப்போது தாழ்ந்து போவார்?

மதிப்புக் கெடுவதற்குரிய செயலைக் குன்றிமணி அளவே செய்தாலும் (குறள் 965).

862. பண்புடைமை என்னும் சிறப்பை எப்போது எளிதாக அடையலாம்?

எளிமையாகப் பழகும்போது (குறள் 991).

863. எப்போது ஒருவனது பிறப்புப் பயனற்றுப் போகும்?

பொருளால் எல்லாமும் செய்யலாம் என எண்ணி, அதனைப் பிறருக்கு உதவாமல் பூட்டி வைக்கும்போது (குறள் 1002).

864. கடவுளின் எட்டு குணங்களைத் திருவள்ளுவர் எவ்வாறு சுட்டுகின்றார்?

1. ஆதிபகவன், 2. வாலறிவன், 3. மலர்மிசை ஏகினான், 4. வேண்டுதல் வேண்டாமை இலான், 5. இறைவன், 6. பொறிவாயில் ஐந்தவித்தான், 7. தனக்குவமை இல்லாதான், 8. அறவாழி அந்தணன் (குறள் 1–8).

865. உலகத்தார் உண்டு என ஆராய்ந்து சொல்லியதை இல்லை என்பவர் எவ்வாறு கருதப்படுவார்?

பேயாக (குறள் 850).

## எவை?

866. ஆட்சியாளரின் வலிமையை அறுக்கும் அரம் எவை?

கடுமையான சொல்லும் வரம்பு கடந்த தண்டனையும் (குறள் 567).

867. ஒரு நாட்டில் எவை சேராதிருக்க வேண்டும்?

கொடிய பசி, நீங்காத நோய், அழிவு செய்யும் பகை (குறள் 734).

868. ஒரு நாட்டிற்கு அணி எவை?

நோய் இல்லாமை, செல்வம், விளைச்சல், மனநிறைவு, பாதுகாப்பு (குறள் 738).

869. திருக்குறளில் மென்மைக்கு எடுத்துக்காட்டாகச் சுட்டப்படுவன எவை?

அனிச்ச மலர், அன்னத்தின் இறகு (குறள் 1120).

870. ஒரு செயலைச் செய்யுமுன் எவற்றை எண்ணிப் பார்க்க வேண்டும்?

அச் செயலால் வரும் நன்மை, தீமை, பயன் ஆகியவற்றை (குறள் 461).

871. ஒரு செயலைச் செய்யும்போது எவற்றைத் தெளிவாக ஆராய்ந்து பின் செய்ய வேண்டும்?

பொருள், கருவி, காலம், செய்யும் முறை, இடம் என்னும் ஐந்தையும் ஆராய்ந்தபின் (குறள் 675).

872. உயர்ந்த பெரியவர்கள் உள்ள அவையில் எவற்றைச் செய்யாதிருத்தல் வேண்டும்?

மற்றவர் காதோடு காதாகப் பேசுவதையும் அவரோடு சேர்ந்து சிரிப்பதையும் (குறள் 694).

873. எவற்றை அறிந்து நட்புக் கொள்ள வேண்டும்?

ஒருவருடைய பண்பு, குடிப்பிறப்பு, குறைகள், அவர் சார்ந்த இனம் ஆகியவற்றை அறிந்து (குறள் 793).

874. சூதாடுபவர் எவற்றை அடைய முடியாது?

உடை, செல்வம், உணவு, மதிப்பு, கல்வி என்னும் ஐந்தினை (குறள் 939).

875. எவற்றை அறிந்து மருத்துவம் செய்திட வேண்டும்?

நோய், அதன் காரணம், அதனைத் தீர்க்கும் வழி ஆகியவற்றை அறிந்து (குறள் 948).

876. எவற்றைக் கருத்தில் கொண்டு மருத்துவம் செய்தல் வேண்டும்?

நோயாளி வயது, நோயின் அளவு, நோயின் காலம் ஆகியவற்றை (குறள் 949).

877. மருத்துவம் என்பது எவற்றை உள்ளடக்கியது?

நோயுற்றவன், மருத்துவன், மருந்து, பக்கத்திலிருந்து உதவுபவன் என்னும் நான்கு பகுதிகள் (குறள் 950).

878. வறுமைத் துன்பம் எவற்றைக் கெடுக்கும்?

குடிப்பிறப்பையும் பழைமையான உடல் அழகையும் கெடுக்கும் (குறள் 1043).

## என்ன?

879. ''ஆதி பகவன்'' என்பதற்கு என்ன பொருள்?

உலக உயிரினத் தோற்றத்திற்கு அடிப்படைக் கூறாக அமைபவன் (குறள் 1).

880. ''மலர்மிசை ஏகினான்'' என்பதற்கு என்ன பொருள்?

மலரின்மீது விரைந்து செல்லும் அளவிற்கு மிக மென்மையானவன் (குறள் 3).

881. ''இருமை வகை'' என்றால் என்ன?

இயற்கையின் எதிர் எதிரான போக்குகள் (குறள் 23).

882. ''மறைமொழி'' என்றால் என்ன?

வாழ்க்கை நெறிகள் (குறள் 28).

883. ''எழுமை எழு பிறப்பு'' என்பதற்கு என்ன பொருள்?

அடுத்தடுத்து வரும்
ஏழு தலைமுறை/பிறப்பு (குறள் 107).

884. மன உறுதிப்பாடு சிதையாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?

பொறுமையைப் போற்றி வாழ வேண்டும் (குறள் 154).

885. உழைத்துச் சம்பாதித்தப் பொருளை எல்லாம் தக்கவர்க்குக் கொடுத்து வாழும் நெறக்கு என்ன பெயர்?

ஒப்புரவு (குறள் 212).

886. சினம் என்ன செய்யும்?

ஒருவருக்குப் பாதுகாப்பாக அமையும் சுற்றத்தையே சுட்டெரித்து விடும் (குறள் 306).

887. முற்பகலில் ஒருவருக்குத் துன்பம் செய்தால் பிற்பகலில் என்ன விளைவு ஏற்படும்?

துன்பம் செய்தவர்க்குத் துன்பம் தானே வந்து சேரும் (குறள் 319).

888. நாள் என்பது என்ன?

இருப்பதுபோல் காட்டி, உயிரை அறுக்கும் வாள் (குறள் 334).

889. ''ஆரா இயற்கை'' என்றால் என்ன?

என்றும் நிறைவு பெறாதது (குறள் 370).

890. ஆசையின் இயல்பு என்ன?

என்றும் நிறைவு பெறாதது (குறள் 370).

891. ''உண்மை அறிவு'' என்றால் என்ன?

ஒருவரிடம் இயல்பாக ஊற்றெடுத்து நிற்கும் ஆர்வ அறிவு (குறள் 373).

892. கிடைப்பதற்கு அரிய காலம் கிடைத்தால் என்ன செய்ய வேண்டும்?

செய்வதற்குக் கடினமான செயல்களை உடனே செய்துவிட வேண்டும் (குறள் 483).

893. அன்பு, அருள், பொருள் இவற்றிற்கு இடையிலான உறவு என்ன?

அன்பு–தாய்; அருள்–சேய்; பொருள் –வளர்ப்புத் தாய் (குறள் 757).

**894.** பழமை என்றால் என்ன?

நண்பர் உரிமையால் செய்வனவற்றை இழிவுபடுத்தாமல் தொடரும் நட்பு (குறள் 801).

**895.** ''தான் எல்லாம் அறிந்தவன்'' என ஒருவர் நினைப்பதற்கு என்ன பெயர்?

புல்லறிவு (குறள் 844).

**896.** வேற்றுமை உணர்வு உடையவர் தமக்கு வளர்ச்சி வருமானால் என்ன செய்வார்?

அதனைச் சமுதாயத் கேட்டிற்குப் பயன்படுத்திக் கொள்வார் (குறள் 859).

**897.** வேற்றுமை உணர்வு இல்லாமல், கலகலப்பாகச் சிரித்து வாழும் நிலை ஏற்பட்டால் என்ன பயன் கிடைக்கும்?

நல்லுறவு என்னும் பெருமித நிலை உண்டாகும் (குறள் 860).

**898.** தம்மைவிடக் கீழானவர்களைக் கண்டால் கயவர்கள் என்ன செய்வார்கள்?

அவர்களைவிடக் கீழானவர்களாகிப் பெருமை கொள்வார்கள் (குறள் 1074).

**899.** அறிவு பெறப் பெற என்ன தோன்றும்?

அறியாமை (குறள் 1110).

**900.** தன் மனைவியிடம் வரம்பு மீறி நடந்துகொள்பவர் என்னாவார்?

தீராத பழியை அடைவார் (குறள் 145).

**901.** பிறர் பொருளைக் கவர நினைத்தால் என்னாகும்?

அப்படி நினைப்பவர் குடும்பம் அழியும்; குற்றம் பெருகும் (குறள் 171).

**902.** பலரும் வெறுக்கும்படியான பயனற்ற பேச்சுகளைப் பேசுபவர் அன்ன ஆவார்?

எல்லோராலும் இகழப்படுவார் (குறள் 191).

**903.** அருள் உணர்வு இல்லாமல் தீய செயல்களைச் செய்பவர் என்ன ஆவார்?

சமுதாய மதிப்பை இழப்பார்; பிறப்பின் பயனை மறப்பார் (குறள் 246).

**904.** திருடுவதால் வந்த வளர்ச்சி என்னாகும்?

வளர்வதுபோல் வளர்ந்து அடியோடு அழிந்து போகும் (குறள் 283).

**905.** திருட்டைத் தவிர பிற நல்ல செயல்களை அறியாதவர் என்ன ஆவார்?

அளவு கடந்த தவறுகள் செய்து அடியோடு அழிவார்.

**906.** உரிமை இல்லாததை எவ்வளவுதான் பாதுகாத்தாலும் என்னாகும்?

அது நிலைக்காது (குறள் 376).

**907.** செய்ய வேண்டிய நல்ல செயல்களைச் செய்யாத கஞ்சனுடைய செல்வம் என்னாகும்?

அவனாலேயே காக்க முடியாமல் அழிந்து போகும் (குறள் 437).

**908.** முறைப்படி அமையாத உழைப்பு என்னாகும்?

பலர் துணையாக இருந்து பாதுகாத்தாலும் வெற்றி தராது (குறள் 468).

**909.** ''ஆட்சியாளன் கொடியவன்'' என்று மக்கள் மனம் நொந்து சொல்ல நேரிட்டால் என்னாகும்?

ஆட்சியாளன் தான் ஆளம் காலம் குறைந்து விரைந்து கெடுவான் (குறள் 564).

**910.** இவர் இன்னார், நான் இன்னவன் என்று பிரித்துப் பார்த்தால், நட்பு என்ன ஆகும்?

சிதைந்து போகும் (குறள் 790).

**911.** துன்பம் வரும்போது விலகிச் செல்பவர் நட்பைச் சாகும்போது நினைத்தாலும் என்ன ஆகும்?

உள்ளத்தைச் சுடும் (குறள் 799).

**912.** செயல் திறம் இல்லாத அறிவிலி ஒரு செயலைச் செய்தால் என்னாகும்?

அச்செயலும் பாழாகும், அவரும் பிறருக்கு அடிமையாவார் (குறள் 836).

**913.** அறிவில்லாதவருக்கு நிறைய செல்வம் கிடைத்தால் என்னாகும்?

உறவினர் அல்லாதார் வயிறாறப் புசிப்பர்; உறவினர் பசியால் வாடுவர் (குறள் 837).

**914.** வேற்றுமை உணர்வு வளரத் தூண்டுதலாக அமைந்தால் என்னாகும்?

துன்பம் மிகும் (குறள் 859).

915. உறவு முறையில் உட்பகை உண்டானால் என்னாகும்?

சாகும் அளவிற்கான துன்பங்கள் பலவற்றை உண்டாக்கும் (குறள் 885).

916. நிலையான கொள்கையுடைய பெரியவர் சீற்றம் கொண்டால் என்னாகும்?

ஆட்சித் தலைவர்கூடத் தம் ஆட்சியை இடையிலேயே இழந்து அழிந்து போவார் (குறள் 899).

917. உயர்ந்த பண்புகள் கொண்ட பெரியவர் சீற்றம் கொண்டால் என்னாகும்?

வலிமை மிக்கத் துணைவர்களைக் கொண்டவர்களும் வாழ முடியாது (குறள் 900).

## யாது?

918. படித்துப் புலமை பெற்றவர் செயல் யாது?

மகிழுமாறு கூடுவர், என்றைக்கும் நினைக்குமாறு பிரிவர் (குறள் 394).

919. ''பொன்றுங்கால் பொன்றாத் துணை'' இதில் வரும் ''பொன்றுங்கால்'' என்பதில் காணும் அறிவியல் நுட்பம் யாது?

''பொன்றுங்கால்'' என்பது வயதாக வயதாக உடல் தன் வலிமையை மெல்ல மெல்ல இழப்பதைச் சுட்டுகிறது (குறள் 36).

## யார்?

920. ''வாழ்க்கைத் துணை'' யார்?

ஆணுக்குப் பெண்; பெண்ணுக்கு ஆண் (அதிகாரம் 6)

921. யார் வாயிலிருந்து வரும் சொற்கள் இனியவை, குற்றமற்றவை?

செம்பொருள் கண்டார் (குறள் 91).

922. யார் பெற்ற வளர்ச்சிகள் அழியாமல் நின்று அவருடைய தலைமுறைக்கும் பாதுகாப்பைத் தரும்?

நடுவு நிலையாளர் (குறள் 112).

923. பலவற்றைப் படித்திருப்பினும் ''அறிவில்லாதவர்'' எனத் தூற்றுதற்கு உரியவர் யார்?

உயர்ந்தவர் சொல்லிய ஒழுக்க நெறிகளையொட்டி வாழாதவர்கள் (குறள் 140).

924. யார் பெற்ற கூரிய அறிவால் பயன் இல்லை?

பிறர் பொருளை விரும்பித் தீய செயல்களைச் செய்பவர் (குறள் 175).

925. யார் திறமைக்கு தக்கவாறு செல்வம் சேரும்?

அறவழியில் நின்று, பிறர் பொருளைக் கவர நினைக்காத அறிவுடையவர் (குறள் 179).

926. யார் செத்தொழிவது சமுதாயத்திற்கு வளர்ச்சி தரும்?

புறங்கூறுபவர் (கோள் சொல்பவர்) (குறள் 138).

927. புறஞ்சொல் பேசி, சொந்த உறவுகளையும் பிரித்துவிடுபவர் யார்?

மகிழுமாறு பேசி நட்புக் கொள்ளத் தெரியாதவர் (குறள் 187).

928. யார் பெரும்பயன் தராத பேச்சுகளைப் பேசமாட்டார்?

மனித இனத்திற்கு அரிய பயன் தருவனவற்றை ஆராயும் அறிவு உடையவர் (குறள் 198).

929. மதிப்பைக் குறைக்கும் சொற்களை மறந்தும் சொல்லாதவர் யார்?

கலக்கம் இல்லாத தூய அறிவினை உடையவர் (குறள் 199).

930. யார் மேலும் ஏழையாக நேரிடும்?

தன் வறுமை நீங்கப் பிறருக்குத் தீமை செய்பவர் (குறள் 205).

931. யார் தீமையின் பக்கம் சிறிதும் நெருங்கக் கூடாது?

தான் நன்றாக வாழ வேண்டும் என்று விரும்புபவர் (குறள் 209).

932. ''உயிர்வாழ்வான்'' என்னும் மதிப்பை பெறுபவர் யார்?

அனைவருக்கும் ஒத்தது எது என்பதை அறிந்து வாழ்பவர் (குறள் 214).

933. சங்கு போலத் தன் உடலைப் பிறர் நலனுக்காக அழித்துக் கொள்ள வல்லவர் யார்?

வித்தகர் (குறள் 235).

934. யார் மீண்டும் அருளைப் பெற முடியாது?

ஒருமுறை அருள் உணர்வை இழந்தவர் (குறள் 248).

935. ஓர் உயிரிலிருந்து நீங்கிய உடம்பை யார் உண்ணமாட்டார்?

குற்றத்திலிருந்து நீங்கிய தெளிந்த அறிவினை உடையவர் (குறள் 258).

936. உலக உயிர்கள் எல்லாம் கைகூப்பி வணங்குதற்கு உரியவர் யார்?

ஓர் உயிரைக் கொல்லாதவராகவும் புலால் உண்ணாதவராகவும் வாழ்பவர் (குறள் 260).

937. தவத்தை யார் மேற்கொள்வது கேடாக முடியும்?

தவத்தில் ஈடுபடும் மன உறுதியும் இல்லாதவர் (குறள் 262).

938. யார் பிறர் பொருளைத் தன் மனம் திருட நினைக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்?

பிறர் தன்னை விளையாட்டாகக்கூடப் பழிக்காதபடி வாழ விரும்புபவர் (குறள் 281).

939. அருள் கருதி அன்புடையர் ஆகும் நிலையை யார் பெற முடியாது?

பிறர் பொருளைத் திருடக் கருதி, அவர் ஏமாறும் நேரம் பார்த்திருப்பவர் (குறள் 285).

940. யார் சினத்தைக் கட்டுப்படுத்தியவர் ஆவார்?

சினம் கொள்ள வாய்ப்புள்ள இடத்தில்கூடச் சினம் கொள்ளாதவர் (குறள் 301).

941. யார் பிறருக்குத் துன்பம் செய்யமாட்டார்?

தமக்குத் துன்பம் வரக்கூடாது எனக் கருதுபவர் (குறள் 320).

942. ஓர் உயிரைக் கொல்வதால் கிடைக்கும் பயன் பெரியதாக இருந்தாலும் அதனை இழிவாகக் கருதுபவர் யார்?

சான்றோர் (குறள் 328).

943. தம் உடம்பிலிருந்து குற்றம் போக்காத தீய வாழ்க்கையர் என்று பழிக்கப்படுபவர் யார்?

ஒன்றன் உடம்பிலிருந்து அதன் உயிரைப் போக்கியவர் (குறள் 330).

944. நாள் என்பது ''உயிரை அறுக்கும் வாள்'' என்பதை அறிய வல்லவர் யார்?

இயற்கையின் இயல்பை அறிந்தவர் (குறள் 333).

945. இருள் நீங்கி இன்பம் பெறுபவர் யார்?

குழப்பம் இல்லாத தெளிந்த அறிவு உள்ளவர் (குறள் 352).

946. மண்ணைப் போலவே விண்ணையும் நெருக்கமாக உணரக் கூடியவர் யார்?

ஐயப்பாடு இல்லாமல் எதையும் தெளிவாக உணரக் கூடியவர் (குறள் 353).

947. புதிய நெறிமுறைகளை உலகிற்கு வழங்கக் கூடியவர் யார்?

கற்று அறிந்து மெய்ப்பொருள் கண்டவர் (குறள் 356).

948. மீண்டும் பிறப்பு உண்டாகுமா என யார் அச்சம் கொள்ளத் தேவை இல்லை?

உள்ளம் ஒருமுகப்பட்டு உண்மையை உணர்பவர் (குறள் 357).

**949.** என்றும் நிலையான இன்பம் பெறுபவர் யார்?

என்றும் நிறைவேறாத இயல்புடைய ஆசையை விட்டவர் (குறள் 370).

**950.** கோடிகோடியாகப் பொருள் சேர்த்தாலும் யார் அவற்றை அனுபவிக்க முடியாது?

முன்னோர் சொன்ன நல்ல வழிகளில் சென்று பொருள் ஈட்டாதவர் (குறள் 378).

**951.** ஆட்சித் தலைவருள் ஏறு போன்றவர் யார்?

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய ஆறும் உடையவர் (குறள் 381).

**952.** ''மக்கட்கு இறை'' என்று போற்றப்படுபவர் யார்?

நடுவுநிலைமை தவறாமல் ஆட்சி செய்யும் ஆட்சித் தலைவர் (குறள் 388).

**953.** ஆட்சித் தலைவர்களுக்கு ஒளியாக அமைபவர் யார்?

கொடை உணர்வு, அருள் உள்ளம், செம்மையான ஆட்சி செய்தல், மக்களைப் பாதுகாத்தல், ஆகிய நான்கும் உள்ளவர் (குறள் 390).

**954.** ஒன்றைத் தவறாகப் புரிந்துகொண்டபோதும் முட்டாள்தனமாகப் பேசாதவர் யார்?

நுட்ப அறிவும், கேள்வி அறிவும் உடையவர் (குறள் 417).

**955.** யார் பணிவான பேச்சுகளைப் பேசுபவராக முடியாது?

நுட்பமான கேள்வி அறிவு பெறாதவர் (குறள் 419).

**956.** யார் விரைவில் கெடுவார்?

பிறரோடு ஒத்து வாழாமல், தம்மைப் பெரிதாக நினைத்துக்கொள்பவர் (குறள் 474).

**957.** யார் இந்த உலகத்தைத் தனதாக்க எண்ணினாலும் அது கைகூடும்?

உரிய காலமும், இடமும் அறிந்து ஒரு செயலைச் செய்பவர் (குறள் 484).

**958.** ஒரு வேலையைச் செய்யுத் தகுதி உடையவர் யார்?

வருமானம் வரும் வழிகளைப் பலவாக்கி, வருமானத்தைப் பெருக்கி, வரவையும் இழப்பையும் அவ்வப்போது எண்ணிப் பார்ப்பவர் (குறள் 512).

**959.** தம் தவறுக்காகப் பின்னால் யார் வருந்துவார்?

துன்பம் வருவதற்கு முன்னரே அவை வராமல் காக்க மறந்தவர் (குறள் 55).

**960.** கொலையாளிகளைவிடக் கொடியவர் யார்?

குடிமக்களை வருத்தித் தீயன செய்யும் ஆட்சித் தலைவர் (குறள் 551).

**961.** யார் பெற்ற செல்வம் பேயிடம் அகப்பட்ட புதையல் போன்றது?

எளிதில் பார்க்கமுடியாத நிலையிலும், கடுகடுத்த முகத்துடனும் இருப்பவர் பெற்ற செல்வம் (குறள் 565).

**962.** யார் பிறந்த குடும்பம் அவர் அழியும் முன்பே அழிந்து போகும்?

அழிவு தரும் சோம்பலைத் தன்னிடம் கொண்டிருக்கும் அறிவில்லாதவர் (குறள் 603).

963. யார் ஊழையும் வெல்ல முடியாது?

சோர்வு இல்லாமலும், காலம் தாழ்த்தாமலும் உழைப்பவர் (குறள் 620).

964. தமக்கு வரும் துன்பத்தைத் துன்பமாக யார் நினைக்க மாட்டார்?

துன்பப்படுவது உடம்பின் இயல்பு எனக் கருதும் உயர்ந்தவர் (குறள் 627).

965. பகைவரும் விரும்பும் சிறப்பைப் பெறுபவர் யார்?

துன்பத்தையே இன்பம் எனக் கொள்பவர் (குறள் 630).

966. தூதுவருள் தலைமையானவர் யார்?

கடமை, காலம், இடம் ஆகியன அறிந்து, ஆராய்ந்து உரைப்பவர் (குறள் 687).

967. தாம் அறிந்தவற்றைப் படித்தவர்முன் அவர் ஏற்குமாறு எடுத்துச் சொல்ல வல்லவர் யார்?

கற்றாருள் கற்றார் (குறள் 722).

968. ஒழுக்கம் இல்லாத செயலில் விருப்பம் கொள்பவர் யார்?

பேதையுள் பேதையார் (குறள் 832).

969. மதிப்புக் கெடுவதற்குரிய செயலை ஒரு குன்றிமணி அளவே செய்தாலும் யார் தாழ்ந்து போவார்?

குன்று போல உயர்ந்தவர் (குறள் 965).

970. பெரியவரைப் போற்றித் துணையாகக் கொள்வோம் என்னும் எண்ணம் யார் உள்ளத்தில் தோன்றாது?

தாழ்ந்தவர் உள்ளத்தில் (குறள் 976).

971. சமுதாயப் பயன் உடையவர் யார்?

மனித நேயத்தோடு சமுதாயக் கடமைகளைச் செய்பவர் (குறள் 994).

972. ''தம் பொருள்'' என்னும் உரிமை பெற்றோர்க்கு யாரால் கிடைக்கிறது? ஏன்?

குழந்தைகளால்; மரபணு அடிப்படையிலான ''தொடர்பு'' இருப்பதால் (குறள் 63).

973. உயர்வினைத் தரும் மெய்யுணர்வாளராக யாரால் ஆக முடியாது?

பிறரிடம் வேற்றுமை உணர்வு கொண்டு வாழ்வதே இன்பமானது என் கருதுபவரால் (குறள் 857).

974. ''அறத்தின் இயல்பு இது'' என யாரிடம் கூறக் கூடாது?

பல்லக்கைச் சுமப்பவர், அதில் அமர்ந்து செல்பவர் ஆகியோரிடம்.

975. யாரிடம் நம்பு நிலைத்திருக்கும்?

மனம் மாறுபடாமல் முடிந்த வகையில் எல்லாம் நண்பனுக்கு உதவுபவரிடம் (குறள் 789).

976. இவ்வுலகம் யாருக்கு உரிமை உடையது?

கடமையும் தவறாமல், இரக்கமும் உடையவராக இருப்பவருக்கு (குறள் 578).

977. யாருக்குப் பகலுங்கூட இருட்டாகத் தோன்றும்?

பிறரோடு சிரித்துப் பழகி வாழத் தெரியாதவருக்கு (குறள் 999).

978. யாருக்குத் தெய்வம் வரிந்து கட்டிக் கொண்டு உதவ முன்வரும்?

''என் குடியை உயர்த்துவேன்'' என எண்ணிச் செயற்படுபவருக்கு (குறள் 1023).

979. யாருடைய நெஞ்சில் அறம் நீங்காமல் இருக்கும்?

அளவறிந்து வாழ்பவர் நெஞ்சில் (குறள் 288).

980. யாருடைய வளர்ச்சி, சமுதாய மதிப்பிற்கு உரியது?

இறுமாப்பு, சினம், இழிந்த குணம் இல்லாதவர் வளர்ச்சி (குறள் 431).

981. உலக மக்கள் யாருடைய சொற்களைக் கேட்டு உடனே செயல்படுவார்கள்?

கருத்துகளை வரிசைப்படுத்தி இனிமையாகச் சொல்லக் கூடியவர் சொற்களைக் கேட்டு.

982. யாருடைய வீட்டில் இருந்துகொண்டு, தாம் சம்பாதித்ததைப் பங்கிட்டு உண்டால் இன்பம் மிகுதியாகும்?

சொந்த வீட்டில் (குறள் 1107).

983. ''செயிர் உடம்பின் செல்லாத்தீ வாழ்க்கை யவர்'' என்னும் தொடர் யாரைச் சுட்டுகிறது?

தொழுநோயாளிகளை (குறள் 330).

984. யாரைத் தெய்வத்திற்குச் சமமாகக் கருத வேண்டும்?

ஐயப்பாடு இல்லாமல், பிறர் உள்ளத்தில் இருப்பதை அப்படியே அறியக் கூடியவரை (குறள் 702).

985. உலகம் யாரை உறவாகக் கொள்ளும்?

குற்றம் இல்லாதவராயத் தம் குடி உயர உழைப்பவரை (குறள் 1026).

986. நிலமகள் யாரைப் பார்த்துச் சிரிப்பாள்?

தாம் ஒன்றும் இல்லாதவர் என்று சோம்பி இருப்பவரை (குறள் 1040).

## யாவை?

987. கெட்டழிவார் விருப்பத்துடன் பூட்டிக் கொள்ளும் அணிகலன்கள் யாவை?

எதையும் காலங்கடந்து செய்யும் போக்கு, மறதி, சோம்பல், மிகுந்த தூக்கம் (குறள் 605).

988. ஒரு நல்ல அமைச்சருக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகள் யாவை?

கூர்மையான அறிவு, செயலாற்றும் திறன், நல்ல ஒழுக்கம் (குறள் 636).

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
### தரமணி, சென்னை - 600 113

**அண்மை வெளியீடுகள்**

| | ரூ. பை. |
|---|---|
| சாஸ்திரக் கோவை | 130.00 |
| திருப்பவனசைப் புராணம் | 150.00 |
| யாப்பருங்கலக்காரிகை | 150.00 |
| பொதிகை நிகண்டு | 200.00 |
| தண்டியலங்காரம் | 160.00 |
| திருக்கடம்பநாத புராணம் | 140.00 |
| அகம் புற ஆராய்ச்சி விளக்கம் | 250.00 |
| திராவிடப் பிரகாசிகை | 150.00 |
| தைலவருக்கச் சுருக்கம் | 100.00 |
| ஸ்ரீ கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் | 100.00 |
| திருவாட்போக்கிப் புராணம் | 150.00 |
| சிதம்பர சபாநாத புராணம் | 80.00 |
| திருவருட்பா இங்கித மாலை | 70.00 |
| ஓங்கார விளக்கம் | 150.00 |
| நன்னெறி பதவுரை | 40.00 |
| எல்லிசாரின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் | 210.00 |
| சரசோதிமாலை – பாகம் 1 | 80.00 |
| சரசோதிமாலை – பாகம் 2 | 140.00 |
| தமிழர் வரலாறு – பாகம் 1 | 260.00 |
| தமிழர் வரலாறு – பாகம் 2 | 270.00 |
| தமிழ் வரலாறு | 240.00 |
| குறுந்தொகை மூலமும் தி.சௌரிப்பெருமாள் அரங்கனார் புத்துரையும் | 200.00 |
| தமிழ் தமிழ் – அகராதி | 1,250.00 |
| Tamil Literature | 300.00 |
| Tamil Culture *1 to 12 Volumes* | 3,200.00 |

வெ.எண். 929

**குறள் முத்துக்கள் ரூ. 70.00**

ISBN 978-93-85165-41-2

9 789385 165412